பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு2030 மார்கழி 28 புதன்கிழமை(12-01-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:41

# சொந்த இடங்களில் உள்ள சிறைகளுக்கு தமிழ்க் கைதிகளை இடம்மாற்றுக

## மட்டக்களப்பு மாவட்ட எம்.பி நீதி அமைச்சருக்குக் கடிதம்

கொழும்பு,ஜனவரி12

**களுத்துறைச் சிறைச்சாலையில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளை பாதுகாப்புக் கருதி அவர்களின் சொந்த இடங்களில் உள்ள சிறைச்சாலைகளுக்கு இடம் மாற்றவேண்டும்.**

**மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொ.செல்வராசா நீதி அமைச்சரிடம் இவ்வாறு கோரியுள்ளார்.**

இது தொடர்பாக நீதி அமைச்சருக்கு அவர் நேற்றுக்கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

களுத்துறைச்சிறையில் இடம்பெற்ற மோதல்களின் தொடர்ச்சியாக அங்கு கைதிகளுக்கும் சிறைக் காவலர்களுக்கும் இடையில் முறுகல்நிலை நிடிக்கின்றது.

இடவசதியற்ற சூழலில் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள தமிழ்க் கைதிகளை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மலையகம் ஆகிய இடங்களில் உள்ள சிறைகளுக்கு மாற்றவேண்டும்.

இதன்மூலம் அவர்களைப் பார்வையிடச் செல்லும் அவர்களது உறவினர்கள் தெற்கில் எதிர்நோக்கும் இன்னல்களையும் நீக்கமுடியும் - என்று தெரிவித்துள்ளார். (ஐ-3)

## களுத்துறைச் சிறைச்சாலை பொறுப்பதிகாரி இடைநிறுத்தம்

கொழும்பு,ஜன.12

களுத்துறைச் சிறைச்சாலையில் கடந்த வாரம் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து அந்தச் சிறைச்சாலையின் பொறுப்பதிகாரி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

புதிய அதிகாரி ஒருவர் உடனடியாக நியமிக்கப்படமாட்டார் என்றும்- வெளிநாட்டில் தங்கியுள்ள நீதி அமைச்சர் திரும்பிய பின்னரே புதிய அதிகாரி நியமிக்கப்படுவார் என்றும்- தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

களுத்துறைச் சிறைச்சாலைக்கு மேலும் 15சிறைக்காவலர்கள் நேற்று அனுப்பப்பட்டுள்ளனர். (ஐ-3-7-150)

## சிறைத் தாக்குதல்கள் குறித்து நீதி அமைச்சுக்கு அறிக்கை

### இரண்டொரு தினங்களில் சமர்ப்பிப்பு

கொழும்பு,ஜன.12

களுத்துறைச் சிறைச்சாலையில் கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் கைதிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்த பூர்வாங்க அறிக்கை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் நீதி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட இருப்பதாகச் சிறைச்சாலை ஆணையாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதல்கள் குறித்து 35க்கும் மேற்பட்ட சிறைக்காவலர்களின் வாக்குமூலங்கள் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாளிகாவத்தையில் நேற்றிரவு கிரனேட் வீச்சு

கொழும்பு மாளிகாவத்தையில் நேற்றிரவு 7.45 மணியளவில் இடம்பெற்ற கிரனேட் தாக்குதலில் நால்வர் காயமடைந்தனர்.

இருகுழுக்களுக்கிடையில் நிலவிவந்த பகைமை காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-3)

## வவுனியா பஸ் நிலையத்தில் தேடுதல்

வவுனியா.ஜன.12

வவுனியா பஸ் நிலையப்பகுதி நேற்றுக்காலை 9 மணியளவில் திடீரெனச் சுற்றிவளைக்கப்பட்டது.

ஒரு மணி நேரம் இடம்பெற்ற இந்தச் சுற்றிவளைப்பில் எவரும் கைதுசெய்யப்படவில்லை. (ஐ-3)

## கல்வியங்காட்டில் கிரனேட் வீச்சு

கல்வியங்காடு இராமலிங்கம் வீதியில் நேற்றிரவு 7.45மணியளவில் பொலீஸார் மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரியவந்தது.

இந்தத் தாக்குதலின் போது ஏற்பட்ட சேதவிவரம் குறித்து மேலதிகத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை. (ஐ-3-6)

## சாரதாம்பாள் பாலியல் வல்லுறவுக் கொலை:

## சந்தேக நபர்களான கடற்படையினர் கொழும்புக்கு அழைத்து விசாரிக்கப்படுவர்

### மர்மங்கள் துலங்குவதாக சி.ஐ.டி அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.12

படுகொலை செய்யப்பட்ட சாரதாம்பாளின் மரணம் குறித்து மர்மங்கள் துலங்க ஆரம்பித்துள்ளன என்று பொலீஸ் புலனாய்வுத்துறை சிரேஷ்ட பொலீஸ் அதிகாரியான அர்சிஸ் தெரிவித்தார்.

இந்த மரணம் தொடர்பான விசாரணைகளை நடத்த யாழ்ப்பாணம் வந்துள்ள புலனாய்வுக் குழுவுக்கு பொறுப்பாக உள்ள இவர் ஓரிரு தினங்களில் கொழும்பு திரும்பவிருக்கின்றார்.

சாரதாம்பாளின் வீட்டுக்கு அருகில் வசிப்பவர்கள், கடற்படைச் சிப்பாய்கள் உட்படப் பலரை விசாரித்து அவர்களிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டன என்றும்-

இதுவரை நடந்த விசாரணை களில் கொலை தொடர்பான மர்மம் ஓரளவு துலங்கியுள்ளது என்றும்-

சம்பந்தப்பட்ட கடற்படைச் சிப்பாய்களைக்கொழும்புக்கு அழைத்தே விசாரணை செய்யவேண்டியுள்ளது என்றும் -

அவர் தெரிவித்தார்.

கொழும்பில் அவர்களை விசாரணை செய்த பின்னரே அவர்கள் மீது வழக்குத்தாக்கல் செய்வது குறித்து முடிவுசெய்யமுடியும் என்றும் -

அவர் மேலும் சொன்னார். (ஐ-3)

## கனத்தையில் இன்று இறுதிச்சடங்கு

கொழும்பு,ஜன.12

பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட அந்தணப் பெண்ணான சாரதாம்பாளின் இறுதிக்கிரியைகள் இன்று கனத்தை மயானத்தில் இடம்பெறவுள்ளன.

மேலதிகபிரேதபரிசோதனைக்காக கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவரின் சடலம் அங்கு வைக்கப்பட்டிருந்தது.

அவரது தந்தையும், அவரது மகளும் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றுவதற்காக நேற்றுக் கொழும்புக்குச் சென்றுள்ளனர்.

களுத்துறைச் சிறைச்சாலையில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடையில் தேடுதல்

வெலிக்கடைப் பொலீஸ் பிரிவுக்குட்பட்ட ராஜகிரிய, வெலிக்கடைப் பகுதிகள் நேற்று முன்தினம் இரவு சுற்றிவளைக்கப்பட்டபோது 18 பேர் கைது செய்யப்பட்டனர். கைதானவர்களில் 14பேர் மலையகத் தமிழ் இளைஞர்கள். 4பேர் சிங்கள மக்கள்.

அந்தப் பகுதியில்படையினர் மேற்கொண்ட தேடுதலில் தமிழர்களின் வீடுகள் துருவித் துருவி சோதனையிடப்பட்டதாகக் கூறப்பட்டது. (ஐ-3-6-7)

## குப்பிளானில் வெற்றுக் காணியில் மனித எலும்புக்கூடு நேற்று மீட்பு!

புன்னாலைக்கட்டுவன்,ஜன.12

குப்பிளான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்துக்கு அருகே உள்ள வெற்றுக்காணியில் இருந்து மனித எலும்புக்கூடு ஒன்று நேற்று மீட்கப்பட்டது.

சுகாதார வாரத்தை ஒட்டி அந்தக்காணியில் மாணவர்கள் கடந்த சில தினங்களாக சிரமதானப்பணியில் ஈடுபட்டுவந்தனர். நேற்று இப்பணியில் ஈடுபட்டிருந்த மாணவர்களே எலும்புக்கூட்டை கண்டுபிடித்தனர். சிதைந்த நிலையில் காணப்பட்ட எலும்புக்கூடு அவ்விடத்தில் இருந்து மீட்கப்பட்டு பாடசாலை அறை ஒன்றில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்தகால வன்செயல்களின் போது குப்பிளான் பகுதியில் காணாமற்போன நபர் ஒருவரின் எலும்புக்கூடாக அது இருக்கலாம் என்று அப்பகுதி வாசிகள் சந்தேகிக்கின்றனர். மேலும் மனித எலும்புக்கூடுகள் அப்பகுதியில் இருக்கக்கூடும் எனவும் சந்தேகிக்கப்படுகிறது. (ஐ-131)

## தனங்களப்புப் பகுதியில் அதிகாலை முதல் மோதல்

தென்மராட்சி,ஜன.12

தனங்களப்புப் பகுதியில் நேற்று அதிகாலை 3மணிமுதல் மோதல்கள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஷெல் மற்றும் பீரங்கிச் சத்தங்களால் சாவகச்சேரியை அண்டிய பிரதேசங்கள் அதிர்ந்த வண்ணம் உள்ளன. தனங்களப்புப்பகுதியில் இருந்து புகை மண்டலம் எழுந்து கொண்டிருந்ததாக அப்பகுதியை அண்டிய கிராமவாசிகள் தெரிவித்தனர்.

கரையோரப் பகுதியில் நேற்று இரவும் ஷெல் வீச்சுக்கள் இடம்பெற்றன.

இதேவேளை -

தனங்களப்பு, கோயிலாக்கண்டி, சங்கத்தார் வயல் மற்றும் ஆனைவிழுவப் பகுதிகளில் விடுதலைப்புலிகள் கடும் மோட்டார் தாக்குதல்களை நடத்தியதாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்றுத் தெரிவித்தது.

படையினர் ஹெலிக்கொப்டர் மூலம் நடத்திய பதில் தாக்குதலில் புலிகளின் நிலைகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-07-7)

## கேகாலையில் ஹொட்டல் மீது தாக்குதல்

கொழும்பு,ஜன.12

கேகாலை நகரில் உள்ள ஹொட்டல் ஒன்று மற்றும் காப்புறுதிக் கூட்டுத்தாபன அலுவலகம் என்பவற்றின் மீது நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத ஆயுதபாணிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். கிரனேட்டுக்கள் மற்றும் ஆயுதங்களால் நடத்தப்பட்ட இத்தாக்குதலினால் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

பொலீஸார் இதுதொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-6)

## நோர்வே அமைச்சரின் விஜயம்: புதிய திகதி விரைவில் அறிவிப்பு

### அந் நாட்டு அரசு தகவல்

ஒஸ்லோ,ஜன.12

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முன்முயற்சிகளை மேற்கொண்டு நோர்வே வெளிவிவகார அமைச்சர் நட் வொலிபெக் விரைவில் இலங்கை செல்லவிருக்கின்றார் என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிகள் அவர் இலங்கைக்குச் செல்ல திட்டமிட்டிருந்தார் என்றும் - இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஐரோப்பிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று ஷெல்கள் வீழ்ந்ததால் சாவகச்சேரியில் பதற்றம்

தென்மராட்சி,ஜன.12

சாவகச்சேரி நகரை அண்டிய பகுதிகளில் நேற்று நண்பகல் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததை அடுத்து அங்கு பெரும் பதற்றம் நிலவியது.

இதன் காரணமாக சந்தையில் கூடியிருந்த வியாபாரிகளும் பொது மக்களும் சிதறி ஓடினர்.

நகரப் பகுதிப் பாடசாலைகளும் மூடப்பட்டு மாணவர்கள் வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மூவர் உயிரிழப்பு

'ஓயாத அலைகள் - 3' நடவடிக்கையில் தமது தரப்பில் மேலும் 3 பேர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இளங்கோ (வீரசிங்கம் சாரங்கன்- யாழ்ப்பாணம்) அருமைமுகிலன் (கோபாலப்பிள்ளை சாபிராம் - முள்ளியவளை), அற்புதன் (இரத்தினசிங்கம் ரவிகரன் - திருகோணமலை) ஆகியோரே உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ஐ-7)

PERSONAL CLASSES

A/L 2002

ஆரம்பம்:- 14-01-2000 வெள்ளி 5.00 p.m

பௌதிகவியல் — திரு. ஸ்பெல்மன்
இரசாயனம் — திரு. அன்பு
உயிரியல் — திரு. அல்போன்ஸ்
இணைந்த கணிதம் — திரு. சிவலோகநாதன்

இடம்:- இல. 18, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

Day Class 14 - 01 - 2000 வெள்ளி 3.00 p.m. ற்கு ஆரம்பமாகும்.

(72610(



கணனிப் பயிற்சி நெறி - 2000

யா/சென். ஜேம்ஸ் ம. வி.
புதிய பிரிவுகள் ஆரம்பம்

- மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- விண்ணப்ப இறுதி நாள் 31—01—2000
- விண்ணப்பப்படிவங்களை நேரிலோ/தபால் மூலமோ பாடசாலையில் பெற்றுக் கொள்ளலாம்.

Note: MS WORD இனை முடித்துக்கொண்ட 2MS/99 / W பிரிவு மாணவர்களுக்கான MS EXCEL வகுப்புகள் 12—01—2000 [இன்று] ஆரம்பமாகவுள்ளன.

பிரிவு I — 3.00 P. M. 12–01–2000
பிரிவு II — 3.00 P. M 15–01 2000

பொறுப்பாசிரியர்
திரு. டோ. ஷெல்ரன் - அதிபர்.
யா/ சென். ஜேம்ஸ் ம. வி.
குருநகர், யாழ்ப்பாணம். [72622]


# மரண அறிவித்தல்கள்

## திருமதி இலச்சுமிப்பிள்ளை சோமசுந்தரம்

காரைநகர் ஆலடியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலச்சுமிப்பிள்ளை சோமசுந்தரம் 10—01—2000 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் சோமசுந்தரம் [தலைமை ஆசிரியர், சிவஞானோதய வித்தியாலயம்] அவர்களின் அன்பு மனைவியும், சுந்தரேஸ்வரி [வவுனியா], அருளானந்தம் [காரைநகர்], யோகலச்சுமி [யோகாரிச்சர், வவுனியா], விக்கினேஸ்வரி [ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்], விவேகானந்தன் [வவுனியா], பரமானந்தம் [பிரான்ஸ்], தேவீஸ்வரி [கனடா] ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் வவுனியாவில் நடைபெறும்.

தகவல்:
அருளானந்தம் (மகன்),
விக்கினேஸ்வரி (மகள்),
V. R. திருநாவுக்கரசு (மருமகன்).

ஆலடி,
காரைநகர். (72695)

## சிவசம்பு கந்தையா

இணுவில் மேற்கைச் சேர்ந்த சிவசம்பு கந்தையா அவர்கள் நேற்று (11-01-2000) காலமானார்.

அன்னார் திருமதி கற்பகம் கந்தையா அவர்களின் அன்புக் கணவரும் சிவசம்பு - செல்லபாக்கியம் தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற பொன்னம்பலம், சந்திரசேகரம், கனகம்மா, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாலசுப்பிரமணியம் (இளைப்பாறிய உபவேந்தர், சிங்கப்பூர் பல்கலைக்கழகம்), பாலேந்திரன் (பொறியியலாளர், பிரித்தானிய புகையிரதப்பகுதி, லண்டன்), மகேந்திரன் ஆகியோரின் சிறிய தந்தையும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் ரட்ணா, சரோஜினி, கீதவாணி (மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் லட்சுமி (விரிவுரையாளர், கோலாலம்பூர் பல்கலைக்கழகம், மலேசியா), அசோகன் (வைத்திய நிபுணர், அமெரிக்கா), இந்திரா (அமெரிக்கா), ஹரிகுமார் (லண்டன்), மீனகுமாரி (லண்டன்), துஷ்யந்தினி, கஜேந்திரன், விசாகன் (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-1-2000) புதன்கிழமை இணுவில் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகேந்திரன்
(மகன்)

இணுவில் மேற்கு,
இணுவில். (72636)

## அறக்கொடை வழங்கலும் பிரார்த்தனையும்

ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகளின் 40 ஆவது விதேக முத்தி தின ஞாபகார்த்த அறக்கொடை வழங்கலும் பிரார்த்தனையும் இம்மாதம் 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு இ. குழந்தை வடிவேலு தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் பு.சுந்தரம் பிள்ளையும் கௌரவ விருந்தினராக இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி. சக்திகிரீவனும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் மு. செ. சரவணபவா' தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கத் தலைவர் சி. சுப்பிரமணியம், கலைவாணி வித்தியாலய அதிபர் ப. செல்லத்துரை ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ—5)


SHAMROCK

Gr 4 முதல் O/L வரை

[புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாக புவியியல், அபிவிருத்தி, ஆங்கில இலக்கியம் உட்பட]

A/L 2000,
A/L 2001

புவியியல்
''மானிடப் புவியியல்''
Mr. ராஜா
DAY CLASS
ஆரம்பமாகியுள்ளது
[சி/10601]



இணைந்த கணிதம்
2002
ஆரம்பம் நாளை வியாழன்
5. 00 P. M.
ஆசிரியர்:
திரு. N. A. சயனன்
(B. Sc.)
தொடர்பு:
60/1 வளாக வீதி,
திருநெல்வேலி.
(72606)



ராஜா
யாழ்ப்பாணம்
அஜித் - சிம்ரன்
மற்றும் மலர் நடித்த
அவள் வருவாளா
10.30, 2.30
[சி/10487]



லிபேட்டி அச்சுவேலி
இன்று மட்டும்
சரத்குமார், தேவயானி
நடித்த
பாட்டாளி
(புதிய வெளியீடு)
T. P. 070-212223
070-212678
[72561]



நாகம்ஸ்
சுன்னாகம்
இன்று முதல்
குதூகல ஆரம்பம்
சரத்குமார், தேவயானி
(இருவேடம்)
ஆனந்தராஜ்,
மணிவண்ணன்
நடித்த
சூரிய வம்சம்
(சீலஸ்)
இனிய பாடல்கள்
நிறைந்தது.
காட்சிகள்: 11.00, 2.30
(புதிய நேரம்)
[72629]


# கைதிகளுக்கு பொங்கல் பொருள் பத்திரிகையாளர்கள் வழங்கினர்

காங்கேசன்துறை தடுப்பு முகாமில் உள்ள கைதிகள் தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாடுவதற்காக வட-இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தினால் பொங்கல் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பொருள்களை நேற்றைய தினம் யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழு அதிகாரியிடம் சங்கப் பிரதிநிதிகள் கையளித்தனர்.

இன்று தடுப்பு முகாமுக்குச் சென்று கைதிகளைப் பார்வையிடவுள்ள ஆணைக்குழு அதிகாரி மேற்படி பொருள்களை அவர்களிடம் கையளிப்பார்

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா ஆறுமுகம்

கல்வயல், சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வட்டுவினிப் பிள்ளையார் கோயில், இணுவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான கந்தையா ஆறுமுகம் என்பவரது இறுதிக் கிரியைகள், அவரது வதிவிடத்தில் இணுவிலில் 12-01-2000 ஆம் திகதி நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும்.

தகவல்:
வேதவனம் குமாரசாமி

கல்வயல்
சாவகச்சேரி (72638)

## திருமதி முத்துவேலு இலட்சுமி

(முன்னாள் ஊழியர், யாழ். போதனாவைத்தியசாலை)

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் அம்மன் றோட், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துவேலு இலட்சுமி நேற்று (11-01-2000) அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துவேலுச்சாமியாரின் அன்பு மனைவி ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12-01-2000) காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
திருமதி K. இராசாத்தி
(மகள்)

42/6 அம்மன் றோட்,
கந்தர்மடம். (72596)

## தில்லையம்பலம் பொன்னம்பலம்

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் பொன்னம்பலம் அவர்கள் நேற்று (11-01-2000) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அரியரத்தினத்தின் அன்புக் கணவரும் மங்கையர்க்கரசி (டென்மார்க்), மலர்வதி (கனடா), மகேஸ்வரி (கனடா), தங்கரத்தினம், சற்குணதேவி, தெய்வேந்திரராஜா (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தந்தையும் சுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான கந்தையா, தில்லைநாதன் மற்றும் பாலசுப்பிரமணியம், ஜெகநாதன், பரமேஸ்வரி, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் பவளராணி, ஜேராணி, ஜெயந்தினி, நகுலேஸ்வரன், கேதீஸ்வரன், கஜேந்திரன், விமலேந்திரன், பத்மாதேவி, பத்மன், சிலன், ராஜன், ஜெயதேவி, சிறிதேவி, பசிந், குமரன், நிசாங்கன், நிசாங்கனி ஆகியோரின் அன்புப் பேரனும் துவாகரன், ஐங்கரன், சுயானி, துஷ்யா, பானு ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11-1-2000) ஊரெழு பொக்கணை மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சற்குணதேவி
(மகள்)

ஊரெழு. (72635)

## கணபதிப்பிள்ளை இராசதுரை

(ஓய்வுபெற்ற குடிவரவு, குடியகல்வு ஆணையாளர், கொழும்பு)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராசதுரை 11-01-2000 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை — அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் அன்னபூரணி (பூமணி—ஓய்வுபெற்ற ஆசிரியை), அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை — மரியப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் மகன் (அமெரிக்கா), குகன் (அமெரிக்கா), ஜெகன், சுமித்திரன் (லைன்ரா—அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஊறின் (அமெரிக்கா), ஜொய்சி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரியங்கா, அமின்டா ஆகியோரின் அன்புப் பேரனும் சின்னத்துரை, காலஞ்சென்ற செல்வரத்தினம், குமாரவேலு, காலஞ்சென்ற சுப்பிரமணியம் அன்னம்மா, அன்னலட்சுமி, சரஸ்வதி, மகேஸ்வரி, குணமணி, நாகேஸ்வரி, தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாபரா நேசம், பிலோமினா, மேரி திரேசா, பெற்றில்டா, இராசதுரை, அரியதுரை, துரை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் மரணச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திருமதி பூமணி இராசதுரை

பற்றிமா வீதி,
பண்டத்தரிப்பு. (72634)

# பொது விளையாட்டு மைதானம் அச்சுவேலிப் பகுதியில் அமைப்பு

வல்லாய், ஜன. 12

அச்சுவேலிப் பகுதியில் பொது விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

விளையாட்டுப் பிரியர்களின் நன்மை கருதி பருத்தித்துறை யாழ்ப்பாணம் வீதியில் உள்ள வல்லைவெளியில் இம்மைதானம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதியை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான கே. என். டக்ளஸ் தேவானந்தா வழங்கியுள்ளார்.

மைதானத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த புதுவருடப் பிறப்பன்று வில்லிசைப் புலவர் சின்னமணி தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கோப்பாய் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளர் ரவி அடிக்கல்லை நட்டார்.

(ஜ-178)

# காங்கேசன், களுத்துறையில் உள்ள 12பேரை இங்கு ஆஜர் செய்யுமாறு மனு

காங்கேசன்துறையிலும் களுத்துறையிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள 12 சந்தேக நபர்களை யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இந்த வழக்கில் எதிராளியான காங்கேசன்துறை பயங்கரவாத தடுப்பு பொலீஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி சார்பில் சப் இன்ஸ்பெக்டர் சந்திரராசா ஆஜரானார்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்படும் சந்தேக நபர்கள் தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சில் மாநாடு ஒன்று நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இருவாரங்களில் இவ்விடயம் தொடர்பான முடிவைத் தெரிவிப்பதாக அவர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து இம்மனுமீதான விசாரணை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சந்தேக நபர்களான கிருஷ்ணன் விஜயகுமார் (யாழ்ப்பாணம்), பரமானந்தம் ஸ்ரீராகவன் (திருநெல்வேலி), மார்க்கண்டு கிருஷாந்தன் (யாழ்ப்பாணம்), சற்குணம் ரஜீந்திரன் (யாழ்ப்பாணம்), நடராசா தயாளன் (யாழ்ப்பாணம்), கணேஷன் உசாநந்த் (ஆனைக்கோட்டை), ஏரம்பமூர்த்தி பத்மினி (நீர்வேலி), சண்முகம் சர்மிலா (மட்டுவில்), மரியதாஸ் மேரி சர்மிலா (திக்கம்—அல்வாய்), தாயும் மகளுமான தெய்வேந்திரம் சுஜிதா (வண்ணார் பண்ணை), தெய்வேந்திரம் ரஞ்சிதவாணி (வண்ணார் பண்ணை) மற்றும் சண்முகலிங்கம் உதயலீலா (வேலணை) ஆகியோர் சார்பிலேயே இம்மனு தாக்கல் செய்யப்பட்டது. அவர்கள் சார்பில் சட்டத்தரணிகள் திருமதி சறோஜினி இளங்கோவன், செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் ஆகியோர் ஆஜராகினர்.

இந்தச் சந்தேக நபர்களில் ஒருவரான — களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த — கணேஷன் உசாநந்த் என்பவர் அண்மையில் அங்கு இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்துள்ளார் என்று அவரது சட்டத்தரணி திருமதி சறோஜினி இளங்கோவன் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார். (உ-5-9)

# கலை விழா

புத்தாயிரமாம் ஆண்டை வரவேற்கும் முகமாக வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகம் நடத்தும் 'கலை விழா' நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் க. சந்திரராசா தலைமையில் நடைபெறும் இந்த விழாவுக்கு அரச அதிபர் க. சண்முகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

# விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 4 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் வருமாறு:

(121039ஏ), (123927ஏ),
(12477ஏ), (12477பி),
(12511ஏ), (12511பி),
(12535ஏ) (12535பி),
(12563ஏ), (12586ஏ),
(12586பி), (12586சி)
(12599ஏ), (12608ஏ),
(12608பி), (12608சி),
(12616ஏ), (12616பி),
(12618 ஏ) (12620 ஏ),
(12624 ஏ), (12632 ஏ),
(12632 பி), (12633 ஏ),
(12633 பி), (12633 சி),
(12633 டி), (12634 ஏ),
(12636 ஏ), (12636 பி),
(12637 ஏ).

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 5 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(126529 ஏ), (126529பி),
(126529 சி)

**யாழ்ப்பாணம்**

(124873 ஏ),(124873 பி),
(124873 சி), (125563 ஏ),
(125563 பி), (125563 சி),
(126640 ஏ), (128372 ஏ),
(128372 பி), (128393 ஏ),
(128393பி), (128393 சி),
(128408 ஏ), (128840பி),
(128408 சி), (128408 டி),
(128532 ஏ), (128578 ஏ),
(133070 ஏ), (133328 ஏ),
(133348 ஏ), (133348 பி),
(133348 சி), (133384 ஏ),
(133384 பி), (133384 சி),
(133405 ஏ), (133405 பி),
(132406 ஏ), (133406 பி),
[133455 ஏ,] [133455பி],
[133462 ஏ], [133504 ஏ],
[133504 பி], [133510 ஏ),
[133510 பி], [133510 சி],
[133520 ஏ], [133520 பி]..
[133520 சி], [133520டி],
]133520 ஈ[, [133522 ஏ[,
[133522 பி), [133522 சி].
(133537ஏ), (133537பி),
(133546ஏ), (133546பி),
(133570ஏ), (133570பி),
(133579ஏ), (133579பி),
(133588ஏ), (133592ஏ),
(133592பி), (133605ஏ),
(133605பி), (133707ஏ),
(133735ஏ), (133735பி),
(133735சி), (133735டி),
(133740ஏ), (133740பி),
(133742ஏ), (133742பி),
(133755ஏ), (133776ஏ),
(133776பி), (133776சி)'
(133797ஏ), (133804ஏ),
[133813ஏ], [133814ஏ],
[133814பி), [123814சி],
(133814டி].

**கரவெட்டி**

[127772ஏ], [127772பி],
[134961ஏ],

**நல்லூர்**

[124833ஏ], [124833பி],
[126591ஏ], [126901ஏ],
(126901பி). [126901சி],
[128431ஏ], (128932ஏ),
(128932பி). (128932சி),
(128932டி).

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் [இம் மாதம் 6 ஆம் திகதி வரை] பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**யாழ்ப்பாணம்**

[109418ஏ], [120663ஏ]'
[121336ஏ]. [124799ஏ].
[128427ஏ], [128444ஏ],
[128447ஏ]. [128448ஏ],
[128448 பி], [128448சி],
[128480ஏ], [128480பி],
[128507ஏ], [128510ஏ],
[128540பி], [128615ஏ],
[128638ஏ], [128638பி],
[128681ஏ], [128681பி],
[128725ஏ], [128725பி],
[128725சி], [128777ஏ],
[133540ஏ], [133540பி],
[133540சி], [133540டி],
[133673ஏ]' [133673பி],
[133673சி], [133673டி],
[133734ஏ] [133734பி],
[133734சி], [133734டி],
[133734ஈ], [133734எல்],
[133759ஏ], [133769ஏ],
[133770ஏ].

**கரவெட்டி**

(125687ஏ), (125687பி),
(127541ஏ), (127541பி),
(127600ஏ), (127600பி),
(127600சி), (127600டி),
(127602ஏ), (127614ஏ),
(127637ஏ), (127793ஏ),
(127793பி), (132879ஏ),
(132988ஏ), (132988பி),
(132998ஏ), (133003ஏ),
(133003பி),

**நல்லூர்**

(128498ஏ), (133730ஏ).

**பருத்தித்துறை**

(127508ஏ), (127508பி),
(127827ஏ), (132827ஏ),
(132827பி), (132888ஏ),
(134997ஏ), (134997பி),

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் ( இம் மாதம் 7 ஆம் திகதி வரை ) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(117210ஏ), (117212ஏ),
(123582ஏ), (129202ஏ)'
(129202பி), (134481ஏ),
(134496ஏ), (134496பி),
(134496சி) (134518ஏ),
(134518பி), (134518சி),
(134522ஏ), (134522பி),
(134522சி), (134522டி),
(134522ஈ), (134522எல்),
(134522ஜி), (13464ஏ),

**யாழ்ப்பாணம்**

(123745ஏ), (123746பி),
(124574ஏ), (124574பி),
(126806ஏ), (126806பி),
(126806சி), (126806டி),
(126806ஈ), (126896 எல்),
(126979ஏ), (128366ஏ),
(128366பி), (128366சி),
(128405ஏ), (128421ஏ),
(128423ஏ), (128425ஏ),
(128430ஏ), (128430பி),
(128464ஏ), (128466ஏ),
(128469பி), (128469சி),
(128471ஏ), (128471பி),
(128500ஏ), (128500பி),
(1285000சி), (128503ஏ),
(128504ஏ), (128504பி),
(128514ஏ), (128514பி)
(128517ஏ), (128517பி),
(128534ஏ), (128577ஏ),
(128577பி), (128577சி).
(128577டி), (128601ஏ),
(128601பி), (128602ஏ),
(128626ஏ), (128746),
(128784ஏ), (128784பி),
(128784சி), (128784டி)'
(128785ஏ), (128792ஏ),
(128793ஏ), (133484ஏ),
(133484பி), (133511ஏ),
(133557ஏ), (133565ஏ),
(133589ஏ), (133680ஏ),
(133680பி), (133702ஏ),
(133702பி), (133702சி),
(133782ஏ).

**கரவெட்டி**

(118929ஏ), (118929பி)'
(118929சி), (118929டி)'
(119003ஏ), (119003பி),
(119003சி), (125637ஏ),
(125637பி), (125637சி).
[127546ஏ], [127546பி],
[127592ஏ], [127592பி],
[127592சி], [127593ஏ]
[127593பி], [127593சி],
[132706ஏ], [132706பி].
[132706சி], [132706டி]
[132709ஏ], [132771ஏ],
[132771பி], [132853ஏ],
[132875ஏ], [132875பி],
[132928ஏ], [132946ஏ].

**கோப்பாய்**

(123743ஏ), (123743பி),
(123797ஏ), (123797பி),
(123805ஏ), (123806ஏ),
(123806பி), (123932ஏ),
(123932பி), (123932சி).
(124014ஏ), (124014பி),
(124069ஏ), (124110ஏ),
(124110பி), (124110சி),
(124110டி), (134021ஏ),
(134021பி), (134312ஏ),
(134315ஏ), (134315பி).

**மருதங்கேணி**

(0850105ஏ), (0850105பி)

**நல்லூர்**

(128451ஏ), (128451பி),
(128451சி), (128451டி),
(128469ஏ), (128472ஏ),
(128472பி), (128472சி),
(128488ஏ), (128569ஏ),
(128668ஏ), (133618ஏ),

**பருத்தித்துறை**

(127629ஏ), (127629பி),
(127629சி), (127629டி),
(127664ஏ), (127761ஏ),
(132890ஏ), (132890பி),
(134958ஏ), (134996ஏ),
(134996பி).

**சண்டிலிப்பாய்**

(127133 ஏ),(127133 பி),
(127133 சி), (127394 ஏ),
(134449 ஏ), (134449 பி),
(134745 ஏ),

**தெல்லிப்பழை**

(121267 ஏ), (134750ஏ),

**உடுவில்**

(123836 ஏ), (123847ஏ),
(123847 பி), (123897 ஏ),
(123897 பி), (133864 ஏ),
(133871 ஏ), (133876 ஏ),
(133881 ஏ), (133898 ஏ),
(133898 பி), (133898 சி),
(133898 டி), (134763 ஏ),
(134763 பி), (134763 சி),
(134763 டி), (127481 ஏ),
(134692 ஏ), (134692 பி),
(134700 ஏ), (134840 ஏ).

(8 ஆம் பக்கமும் பார்க்கவும்)


## நாமும் துயருறுகின்றோம்

எம் இனிய ஆசிரியர்
திருமதி பரமேஸ்வரி வீராச்சாமி
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி நாகமுத்து இராமையா**

அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு நாம் துயருறும் வேளையில் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்து அவரின் ஆத்மசாந்திக்காக நாமும் பிரார்த்திக்கின்றோம்.

மாணவர்கள்
யா / புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

(சி / 10595)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை
திருமதி பரமேஸ்வரி வீராச்சாமி
அவர்களின் அன்புத்தாயார்
**திருமதி நாகமுத்து இராமையா**

அவர்கள் காலமாகிய செய்தி கேட்டு அதிர்ச்சியடையும் வேளையில் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
யா / புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

(சி/10597)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி பரமேஸ்வரி வீராச்சாமி
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி நாகமுத்து இராமையா**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்திகேட்டு துயருறும் வேளையில் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினர்.
யா/ புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயம்

(சி/10596)

### மானிப்பாய் மேற்கில்

# 152 விவசாயிகளுக்கு எள்விதை வழங்குவதற்கு நடவடிக்கை

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்திற்குட்பட்ட 152 விவசாயிகளுக்கு எள்விதையும் உள்ளீடுகளும் வழங்கப்படவுள்ளதாக விவசாயிகள் சம்மேளனத் தலைவர் சி. பொ. எ. ம. க. முதலியார் தெரிவித்தார்.

பெரும்போக நெற்பயிர் அறுவடை முடிந்ததும் 20 ஏக்கர் காணிகளில் மேற்படி எள் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் —

இதற்கான உள்ளீடுகளை திருநெல்வேலி விவசாய திணைக்கள உதவி ஆணையாளர் ஊடாக வழங்கப்படும் என்றும் — சம்மேளனத் தலைவர் தெரிவித்தார்.

# ருபெல்லா தடுப்பூசி

திருநெல்வேலி பாரதி சனசமூக நிலையத்தில் வைத்து அப்பகுதியிலுள்ள பெண்களுக்கு யாழ். மருத்துவபீட மாணவர்களினால் ருபெல்லா தடுப்பூசி போடப்பட்டது. (ஐ-5)

# குமணவில் அரிசி, சீனி வரும்

யாழ்ப்பாணம், ஜன. 12

'குமண' கப்பல் மூலம் யாழ். செயலகப் புனர்வாழ்வு பகுதிக்கு ஆயிரத்து ஐந்நூறு மெற்றிக் தொன் சீனியும், ஆயிரத்து ஐந்நூறு மெற்றிக் தொன் அரிசியும் ஏற்றி வரப்படவுள்ளன.

கொழும்பில் தற்பொழுது பொருள்களை ஏற்றிக் கொண்டு நிற்கும் இக்கப்பல் அடுத்த சில வாரங்களில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-5)

# இலவச வகுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 12

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் சைவப் புலவர் மற்றும் இளஞ்சைவப் புலவர் பட்டப்பரீட்சைகளுக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் இலவச வகுப்புக்களை நடத்தவுள்ளது.

இது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மேற்படி பரீட்சைகளுக்குத் தோற்றவிருக்கும் சுமார் 70 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இலவச வகுப்புக்களை ஆரம்பிப்பது எனவும் —

இலக்கணம், இலக்கியம் மற்றும் சாத்திரம், உரைநடை, வரலாறு முதலிய பாடங்களை தகுதியான ஆசிரியர்களைக் கொண்டு கற்பிப்பது எனவும் — தீர்மானிக்கப்பட்டதாக சைவப்புலவர் சங்கத்தின் செயலாளர் சத்தியதாசன் தெரிவித்தார். [இ-7]

# கசிப்பு அழிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 12

கசிப்புக் கடத்திச் சென்ற வாகனம் பின் தொடர்ந்து சென்ற இளைஞர் குழு ஒன்று அதனை நிறுத்தி அதனுள் இருந்த கசிப்பையும் ஊற்றி அழித்ததுடன், கடத்திச் சென்றவர்களையும் எச்சரிக்கை செய்து விடுவித்தது.

நீர்வேலிப் பகுதியில் கடந்த மூன்று நாள்களுக்கு முன் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சுமார் 15 லீற்றர் கசிப்பு ஊற்றி அழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நீர்வேலிப் பகுதி இளைஞர் குழுவினரே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர். (உ-1)

# "மகாபொல" புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் 22 இல்!

1998–1999 ஆம் ஆண்டுக்கான மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களில் எதிர்வரும் 22 ஆந்திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலை அரங்கில் இந்த வைபவம் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து இம்முறை 498 மாணவர்கள் மகாபொல புலமைப் பரிசில் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டிருப்பதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-175)

---

# முதலாவது பிறந்ததின வாழ்த்து



## சிவமோகன் டனுசன்

## 12 - 01 - 2000

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த

சிவமோகன் – வினிதா தம்பதிகளின்

செல்வப் புதல்வன் டனுசன்

தனது முதலாவது பிறந்த நாளை 12-1-2000 இன்று புதன்கிழமை பிரான்ஸில் தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, மம்மி, அச்சுவேலி அப்பப்பா, அப்பம்மா, சிவாச் சித்தப்பா, சிந்து சித்தப்பா, கிரி மாமா, சீலா அத்தை, உடுவில் அம்மப்பா, தங்கராசா அப்பப்பா, மார் அப்பம்மா, குணசீலன் மாமா, அத்தை, தனசீலன் மாமா, அகிலகாந்தன் சித்தப்பா, ஜெனகா சித்தி, ஜெசீலன் மாமா(ஹொலண்ட்), ஜெனோசீலன் மாமா(ஜேர்மன்), ஜேம்ஸ்மாமா(ஜேர்மன்), வினோசீலன் மாமா(பிரான்ஸ்) மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் சித்திரவேலாயுதர் அருள் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

- அப்பப்பா

அச்சுவேலி வடக்கு
அச்சுவேலி. (72592)

---

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 22 | 3 |
| 6 | 1 |
| 1928 | 1998 |

## அமரர் சிற்றம்பலம் நடராசபிள்ளை

(ஓய்வு பெற்ற கிராமசேவையாளர்)

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு அணைந்து ஆண்டு இரண்டு ஆனாலும் உங்கள் நினைவு என்றென்றும் எம் மனதை விட்டு அகலாது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வாழைத்தோட்டம்,
வரணி வடக்கு, வரணி. (72567)

---


# NEW BRIGHT

கல்வி நிலையம்
(யா/மாட்டின் வீதி)

## பதவி விண்ணப்பம் கோருதல்

★ தொலைபேசி இயக்குநர்
★ அலுவலக உதவியாளர்
★ தட்டெழுத்தாளர்

ஆண் / பெண் இருபாலாரும் தமது விண்ணப்பங்களை 16-01-2000 இற்கு முன் நேரில் அல்லது தபாலில் சமர்ப்பிக்கவும்.

- நிர்வாகி

(72588)


---

# நீங்காத நினைவலையில்

# ஓராண்டு



## அமரர் கந்தையா பேரம்பலம்

(பாய்க்கடை, யாழ்ப்பாணம்)

அன்னையின் மடியில்: 12. 02. 1951 — ஆண்டவன் அடியில்: 24. 12. 1998

திதி: 12 – 01 – 2000

ஆண்டொன்று சென்றாலும் – உங்கள்
அன்பு முகம் மறையவில்லை.

உமது பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
அக்கா - தங்கரத்தினம்,
தம்பி - சிவம்.

கொக்கன் வளவு,
இணுவில் கிழக்கு. (72559)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி சரஸ்வதி திருநாவுக்கரசு

அன்னை மடியில்: 18-03-1936 — அம்பாள் திருவடியில்: 22-01-1999

திதி: பூர்வபட்சசஷ்டி 12-01-2000 புதன்கிழமை

அடிசிற் கினியாளே அன்புடைய மாதே!
படிசொற் தவறாத பாவாய் -- அடிவருடிப்
பின்தூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ?
என்தூங்கு மென்கண் இரா!

இமைப்பொழுதும் நெஞ்சில் நீங்கா

| | |
| --- | --- |
| பாசமிகு கணவர்: | பொ. திருநாவுக்கரசு, |
| மருமகன்; | செ. நாகேஸ்வரன், |
| மகள்: | நா. நகுலேஸ்வரி (வள்ளி), |
| பேரன்: | நா. நிரோதயன், |
| பேர்த்தி: | நா. நிலானி, |

பழைய முகவரி:
இல. 1, திருமகள் வீதி,
அரியாலை.

புதிய முகவரி:
இல. 3/1,
ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.

(72580)

## கோடீஸ்வரர் சுட்டுக் கொலை

மொஸ்கோ, ஜன. 12

ரஷ்யாவின் முன்னணித் தொழிலதிபரும் கோடீஸ்வரருமான கில்வியா வயஸ்மான் நேற்று முன்தினம் சென் பீற்றர்ஸ் பேர்க் நகரில் வைத்து இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

(இ-6-9)

## மீண்டும் வெற்றி

உஸ்பெகிஸ்தானில் அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நாட்டின் தற்போதைய ஜனாதிபதி இஸ்லாம் கிரிபோ மீண்டும் வெற்றி பெற்றுள்ளார். இவருக்கு ஆதரவாக 91சதவித வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன என்று தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

[இ-6-9]

## சூரிச்சில் விமானவிபத்து

சூரிச், ஜன. 12

சுவிற்சர்லாந்து சூரிச் நகரில் இடம்பெற்ற விமான விபத்து ஒன்றில் அதில் பயணம் செய்த 10 பேரும் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு சூரிச் விமான நிலையத்தில் இருந்து விமானம் புறப்பட்ட ஒரு சில நிமிடங்களில் அது விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது. விபத்துக்கான காரணம் என்ன என்பது குறித்து தெரிய வரவில்லை என்று அதிகாரிகள் கூறினர்.

(இ-6-9)

## நிலநடுக்கத்தால் சுரங்கம் இடிந்து வீழ்ந்தது

ஜொகனர்ஸ்பேர்க், ஜன 12

தென் ஆபிரிக்காவில் நேற்று முன்தினம் சிறிய அளவிலான நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் சுரங்கம் ஒன்று இடிந்து வீழ்ந்தில் அதில் பணியாற்றிக் கொண்டிருந்த 15 ஊழியர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டுள்ளனர்.

(இ-6-9)

## ஜப்பான் பிரதமர் கம்போடியா விஜயம்

நொம்பென், ஜன. 12

ஜப்பானியப் பிரதமர் ஹெய்சோ ஒபூச்சி தனது தென் கிழக்காசிய விஜயத்தின் முதற்கட்டமாக கம்போடியத்தலைநகர் நொம்பெனுக்குச் சென்றுள்ளார்.

இந்த விஜயத்தின்போது அவர் தாய்லாந்துக்கும் பயணம் செய்து அங்கு தாய்லாந்துப் பிரதமருடன் பேச்சு நடத்துவார் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-6-9)

## இந்தியாவுக்கு எதிராகப் போராட 5 லட்சம் பேர்

இஸ்லாமாபாத், ஜன. 12

இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் கடத்தப்பட்ட சமயம் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்தவர்களை விடுவிப்பதற்காக இந்திய அரசாங்கம் விடுதலை செய்த தீவிரவாதியான மௌலானா அஸார் மசூத் இந்தியாவுக்கு எதிராகப் போராடுவதற்காக 5 லட்சம் பேரை ஒன்று திரட்டப்போவதாகக் கூறி உள்ளார்.

அதேசமயம் —

இந்த விமானக் கடத்தலுக்கு தாம் இரண்டு வருடங்களாகத் திட்டமிட்டு வந்ததாக கடத்தல்காரர்கள் தெரிவித்திருந்தனர் என்று பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவரான டாக்டர் ஹனிபா ஜோஷி என்பவர் கூறியுள்ளார். (இ-6-9)

### வட அயர்லாந்தில்

# புரொட்டஸ்தாந்து அரசியல் தலைவர் சுட்டுக் கொலை!

லண்டன், ஜன. 12

வட அயர்லாந்தில் புரொட்டஸ்தாந்து அரசியல் தலைவர் ஒருவர் நேற்று இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தடைசெய்யப்பட்ட அலஸ்ரர் தொண்டர் படையின் கெரில்லா அணித் தலைவரே கொல்லப்பட்டவராவார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அங்கு பெரும் பதற்றம் நிலவி வருகின்றது. மக்களை அமைதி பேணுமாறு அரசியல் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். வன்முறைகள் எவற்றிலும் இறங்க வேண்டாம் என்றும் அவர்கள் புரொட்டஸ்தாந்து இனத்தவர்களிடம் கேட்டுள்ளனர்.

சின்பெயின் அமைப்பின் தலைவர் ஜெரி அடம்ஸ் ஜனாதிபதி கிளின்ரனுடன் பேச்சு நடத்துவதற்காக அமெரிக்கா புறப்படுவதற்கு சில மணி நேரம் முன்னதாக இந்தச்சம்பவம் நடந்தது.

போட்டிப் புரொட்டஸ்தாந்து குழு ஒன்றே இவரது கொலைக்குக் காரணமாக இருக்கலாம் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

வட அயர்லாந்தில் தன்னாட்சி ஏற்படுத்தப்பட்ட பின்னர் நடைபெறும் முதலாவது அரசியல் கொலை இது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-6)

# இஸ்ரேல் - சிரிய பிரச்சினைக்கு இன்னும் இரு மாதங்களில் தீர்வு

## ஜனாதிபதி கிளின்ரன் தெரிவிப்பு

நியூயோர்க், ஜன. 12

இஸ்ரேலும் சிரியாவும் இன்னும் இரு மாதங்களுக்குள் தமக்கிடையிலான பிணக்குகளைப் பேசித் தீர்த்துக் கொள்வதற்கு இணங்கி உள்ளன என்று அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் தெரிவித்தார்.

அமெரிக்காவின் மேற்கு வேர்ஜினிய மாநிலத்தின் ஷெபேர்ட் நகரில் கடந்த ஒரு வாரகாலமாக இஸ்ரேல்—சிரிய நாடுகளுக்கு இடையில் பேச்சுக்கள் இடம் பெற்று வந்தன. இந்தப்பேச்சுக்களை சுமுகமாக முன்னெடுத்துச் செல்வதற்காக ஜனாதிபதி கிளின்ரன் ஐந்து தடவைகள் பேச்சுக்களில் தலையிட வேண்டி ஏற்பட்டது. எனினும் அந்தப் பேச்சுக்களில் எந்த வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்ற கருத்தை நிராகரித்த கிளின்ரன், முதல்சுற்றுப் பேச்சுக்களிலேயே முழுமையான அமைதி உடன்படிக்கை ஒன்று எட்டப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்க முடியாது என்றார். ஏனெனில் தற்போது இரு நாடுகளுக்கிடையிலும் விவாதிக்கப்பட்டுவரும் விடயங்கள் மிகவும் சிக்கலானவை. அவற்றை தெளிவான பேச்சுக்கள் மூலமே தீர்க்க முடியும். ஆயினும் அப்பிரச்சினைகளில் எவையும் தீர்க்க முடியாதவை அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

இஸ்ரேல் — சிரிய பேச்சுக்களை இன்னும் ஒரு வாரத்தில் மீண்டும் ஆரம்பிப்பதற்கு இரு நாட்டுத் தலைவர்களும் இணங்கி இருப்பதாகவும்

உலக அரங்கில்

கிளின்ரன் மேலும் தெரிவித்தார்.

அடுத்த சுற்றுப் பேச்சுக்களை எங்கு நடத்துவது என்பது குறித்து தற்போது விவாதிக்கப்பட்டு வருவதாக அமெரிக்க வெளியுறவுத் துறைப் பேச்சாளர் ஜேம்ஸ் ரூபின் கூறினார்.

(இ - 6 - 9)

### கோலான்குன்றுப் பகுதியை

## சிரியாவிடம் ஒப்படைப்பதை எதிர்த்து இஸ்ரேலில் ஆர்ப்பாட்டம்

ஜெருசலேம், ஜன. 12

இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள கோலான்குன்றுப் பகுதியை மீண்டும் சிரியாவிடம் ஒப்படைக்கும் பேச்சுக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இஸ்ரேலின் ரெல் அவிவ் நகரில் யூதக் குடியேறிகள் பெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அமெரிக்காவில் நடைபெற்ற இஸ்ரேல் — சிரிய பேச்சுக்களில் இந்த குன்றுப் பகுதியை ஒப்படைப்பது குறித்தும் இரு நாட்டுத் தலைவர்களும் பேச்சு நடத்தினர். அதில் எந்த இணக்கமும் காணப்படாத போதும் கோலான் குன்றுப் பகுதியை மீண்டும் ஒப்படைக்கக் கூடாது என்று அப்பகுதியில் குடியேறி உள்ள இஸ்ரேலியர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்திவருகின்றனர் இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு ஆயிரக் கணக்கில்யூதக்குடியேறிகள்திரண்டுவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கோலான்குன்றுப் பகுதியை இஸ்ரேல் சிரியாவிடம் மீண்டும் ஒப்படைக்காவிட்டால் அமைதிப் பேச்சுக்கள் ஒரு போதும் வெற்றியளிக்காது என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-6-9)

## தப்பி வந்த திபெத்திய இளம் துறவி இந்தியாவில்தஞ்சம் கோரவில்லை

தரம்ஸாரா, ஜன. 12

சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள திபெத்தில் இருந்து தப்பிவந்த இந்தியாவின் ஹிமாசலப் பிரதேச தரம்ஸாராவில் தங்கி உள்ள திபெத்திய இளம் துறவியான ஹரம்பாலாமா இந்தியாவில் அரசியல் தஞ்சம் கோரவில்லை என்று இந்திய அரசு அறிவித்துள்ளது.

இந்தியாவில் ஏற்கனவே அரசியல் தஞ்சம் பெற்றுள்ளவரும் திபெத்துக்கு வெளியே இருந்து செயற்பட்டுவரும் அந் நாட்டு அரசின் தலைவருமான தலாய்லாமா இளம் துறவியான ஹரம்பாலாமாவுக்கு அரசியல் தஞ்சம் வழங்குமாறு கோரி இருந்ததாக வெளியான செய்திகளை அடுத்து இந்திய அரசு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

ஹரம்பாலாமாவுக்கு அரசியல் தஞ்சம் வழங்குமாறு கோரும் எந்த உத்தியோகபூர்வமான கோரிக்கையும் எந்தத் தரப்பிடம் இருந்தும் விடுக்கப்படவில்லை என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஹரம்பாலாமாவுக்கு அரசியல் தஞ்சம் வழங்கப்படுவது சீனாவுடனான உறவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதால் அந்த விடயத்தில் இந்தியா மிக நிதானமாகவே நடந்து கொள்ளும் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அதேசமயம்—

ஹரம்பாலாமாவின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலைமை இருப்பதனால் அவரது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தரம்ஸாரா பொலீஸார் தெரிவித்தனர். தற்போது அவர் தலாய்லாமாவின் மடாலயம் ஒன்றில் பாதுகாப்பாகத் தக்கவைக்கப்பட்டுள்ளார் என்று அவர்கள் கூறினர்.

(இ-6-9)

## வேலை நிறுத்தம்

புதுடில்லி, ஜன. 12

இந்திய அரசுக்குச் சொந்தமான எண்ணெய் நிறுவன ஊழியர்கள் 45 ஆயிரம் பேர் நேற்று முதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் எனக் கோரி மத்திய பெற்றோலியத்துறை அமைச்சர் ராம் நாயக்குடன் நடத்திய பேச்சுக்கள்தோல்வி அடைந்ததை அடுத்து தாம் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளதாக எண்ணெய் நிறுவன ஊழியர்களின் சங்கம் அறிவித்துள்ளது.

இந்த வேலை நிறுத்தத்துக்கு டில்லி மற்றும் மும்பை உயர் நீதிமன்றங்கள் தடைவிதித்துள்ளன. எனினும் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடத்தப்படும் என்று ஊழியர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (இ-6-9)

## இஸ்ரேல் விஜயம்

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்சிங் இந்த மாதம் இஸ்ரேலுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ள உள்ளதாக புதுடில்லி அறிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கும் இந்தியாவுக்கும் இடையில் கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்னர் ராஜீய ரீதியான உறவுகள் ஏற்படுத்தப்பட்ட பின்னர் இஸ்ரேலுக்கு விஜயம் மேற்கொள்ளும் முதலாவது அமைச்சர் ஜஸ்வந்சிங் ஆவார்.

அவரது விஜயத்துக்கு இஸ்ரேல் மிகுந்த முக்கியத்துவம் தருவதாக இந்தியாவுக்கான இஸ்ரேலியத் தூதர் டாக்டர் வை. ஹெப்ம் தெரிவித்தார்.

## சீனா விஜயம்

பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பெர்வேஸ் முஷாரப் இந்த மாதம் 17 ஆம் திகதி சீனாவுக்கு விஜயம் செய்ய உள்ளார். புதிய நூற்றாண்டு பிறந்த பின்னர் அவர் மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவாகும்.

### பிலிப்பைன்ஸில்

# எஸ்ராடாவின் அரசைக் கவிழ்ப்பதற்கு முயற்சி

மணிலா, ஜன. 12

பிலிப்பைன்ஸில் ஜனாதிபதி ஜோசப் எஸ்ராடாவின் அரசைக் கவிழ்ப்பதற்கு இராணுவச் சதிப்புரட்சி நடைபெறுவதாக வெளியான செய்திகளை அந்த நாட்டு பாதுகாப்பு அமைச்சர் அருளாண்டோ மெக்காடோ மறுத்துள்ளார்.

அரசியல் புரட்சி ஒன்றின் மூலம் அரசைக் கவிழ்த்துவிட்டு இராணுவ ஆட்சியை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் —

புரட்சிக்கான தயார் நிலையில் தலைநகர் மணிலாவில் கடற்படை வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர் என்றும் — மணிலாப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தச் செய்தியை மறுத்துக் கருத்து வெளியிட்ட பாதுகாப்புத் துறை அமைச்சர் தலைநகரில் ரோந்துப் பணியில் ஈடுபடும் பொலீஸாருக்கு உதவுவதற்காகவே கடற்படையினர்தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் —

அரசின் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் முயற்சிகளின் ஒரு பகுதியாகவே அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் — தெரிவித்தார். (இ-6-9)

## ஜப்பானில் நிலக் கண்ணிகளை அழிக்கும் நடவடிக்கை ஆரம்பம்

டோக்கியோ, ஜன. 12

ஜப்பான் தன்னிடம் உள்ள கண்ணிவெடிகளில் ஒரு லட்சம் நிலக் கண்ணிகளை இந்தமாத முடிவுக்குள் அழிப்பதற்கு முடிவு செய்துள்ளது.

இதற்கான பணிகள் மூன்று தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. பாதுகாப்பான முறையில் நிலக் கண்ணிகளை அழிக்கும் உலகளாவிய ஒப்பந்தத்துக்கு அமைய இந்தப் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

ஜப்பானிடம் சுமார் 10 லட்சம் நிலக் கண்ணிவெடிகள் உள்ளன என்றும் —

இவற்றில் ஒரு சிறு தொகுதியைப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி என்பவற்றுக்குப் பயன்படுத்துவதற்காக அழிக்காமல் தொடர்ந்து பேணப்போவதாகவும் —

ஏனையவை அனைத்தும் 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்கு முன்னர் முற்றாக அழிக்கப்பட்டுவிடும் என்றும்— அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-6-9)

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறி விட்டது

சுப்பையா சிவா என்ற பெயருடைய எனது பிரயாணப்பை(Bag) 7-1-2000 கப்பலில் வந்து யாழ். பஸ் நிலையத்தில் இறங்கிய பொழுது தவறி விட்டது. அதனுள் நகை வேலை செய்யும் ஆயுதப்பொருள்கள் இருந்தன. மாறி எடுத்தவர்கள் தயவு செய்து இல. 152, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.
(72584)

கொடிகாமம் பொதுச் சந்தையில் கடமையாற்றும் சோமசுந்தரம் பாலகிருஸ்ணன் ஆகிய எனது தேசிய, விசேட உத்தியோக அடையாள அட்டைகள் (620072010 V, 091026329) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கொடிகாமம் கோகிலா தேநீர்ச் சாலையில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.
(சி-10569)

சிலுவைதாஸ் திரேசம்மா ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (428120280V) 6/1/00 யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல. 131, ... றோட், குருநகர், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும்.
[72600]

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Honda CD - 50 Beny (பதியப்படாதது). T.V 12'' AC - DC Japan, குளிர் சாதனப்பெட்டி, கிறைன்டர், பஜாஜ் ஸ்கூட்டர் உடன் விற்பனைக்கு உண்டு. N - பாரத். இல. 48, இரண்டாவது லேன், பிறவுண்றோட், கந்தர்மடம்.
(72601)

### நாற்று விற்பனைக்கு

நல்லின சுத்தரி, மிளகாய் நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மூர்த்தி, அளவெட்டி மேற்கு, அளவெட்டி.
(72595)

### திருமண சேவை

எம்மிடம் எல்லா மதத்திலும் மணமக்கள் உள்ளனர். படம், சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு: துர்க்கா திருமணசேவை, இல. 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 021-3383
(72602)

## கண்ணீர் அஞ்சலி

2 ஆம் வருட புவியியல் சிறப்புக்கலை மாணவி
**ஹேமலதாவின் அன்புக் கணவர்**
அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

3 ஆம் வருட மாணவர்கள்
கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.
(72611)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை சங்கீத ஆசிரியை
**செல்வி உதயமலர் துரைராஜா அவர்களின்**
அன்புத் தந்தையாகிய
**கார்த்திகேசு துரைராஜா**
அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யாழ் ஊர்காவற்றுறை
புனித மரியாள் மகளிர் வித்தியாலயம்
(72604)

## கண்கவர் பொங்கல் வாழ்த்து மடல்களுடன்
## பண்டத்தரிப்பில்
# நிருஷா புக் சென்ரர்
## மங்களகரமான திறப்பு விழா

**இன்று (12-01-2000) புதன்கிழமை காலை 9-11 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் மங்களகரமாக ஆரம்பித்து வைக்கின்றோம்.**

கதிர்காமக் கந்தனின் திருவுருவக் காட்சியினையும் காதல் நினைவினை வெளிப்படுத்தும் இருபுறாக்களின் கற்பனையையும் வெளிப்படுத்தும் வகையில் 2000 வருடமான சுபவருடத்தில் கனடா மாநகராம் ரொறன்ரோவில் கல்வி பயிலும் **கே. நிருஷாவின்** கைவண்ணத்தில் கொம்பியூட்டர் ரைப்பிங் செய்து யாழ். சிறார்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையிலும் மற்றும் தொழிலகங்கள் முதற்கொண்டு பாவனைக்கு உரிய முறையிலும் மிகவும் நுட்பமான முறையில் மாதம் திகதிகளையும் சுவாமிப் படங்களுடன் நூற்றுக்கும் மேற்பட்ட சினிமா நடிகர் நடிகைகள் அனைவரையும் பொங்கல் வாழ்த்து மடலுள் நிறுத்தி விற்பனை செய்ய இருக்கின்றோம் என்பதனை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

தென்னிந்திய சிறுவர் சஞ்சிகை விற்பனை செய்வதில் முன்னணி வகிக்கும் நிறுவனங்கள்:

**பாலன் புக் சென்ரர்**
87, சிவன் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம் — 021 - 2113

**நிருஷா புக் சென்ரர்**
72, பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.
தொலைபேசி இலக்கம் — 021 - 3031

**கேஜிகா சில்வர் சமுத்திரம்**
73, பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.
தொலைபேசி இலக்கம் — 021 - 3032

**வளர்பிறை பட்டுச்சோலை**
பிரதான வீதி,
சங்கானை.

மொத்தக் கொள்வனவுக்கு தொடர்பு கொள்ளவும்:

## நிருஷா புக் சென்ரர்

72, பிரதான வீதி, பண்டத்தரிப்பு.
தொலைபேசி இலக்கம்:- 021 — 3031, 021 — 3032
[72609]

## 36 ஆவது அகில இலங்கை வேதாகம
## வினாவிடைப் போட்டி 2000

பிராந்தியப் போட்டிகள் 20 - 05 - 2000 அன்று நடைபெறவுள்ளன.

12-16 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள் பங்குபற்றலாம்.

பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை யாழ். வை. எம். சி. ஏ. காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு திகதி 25 - 03 - 2000.**

★ சகல கிறிஸ்தவ சபைகளையும் சார்ந்த பிள்ளைகள் இதில் பங்குபற்றலாம்.

செயலாளர்,
வை. எம். சி. ஏ. யாழ்ப்பாணம்.
(72620)

## UNIVERSITY OF JAFFNA

## TENDER NOTICE

The Chairman, Tender Board, University of Jaffna will receive sealed tenders from contractors registered with ICTAD for Civil Engineering works or from Multi purpose co-operative Socities for the 'Repairs / External colour washing to Medical Faculty Complex'.

Tender forms may be obtained from the Works Engineer (Civil), University of Jaffna until 21 - 01 - 2000 on producing Registration book and cash payment for the following tender fees at the Shroff's counter of University of Jaffna.

1. Refundable deposit - Rs. 9,500.00
2. Non - refundable deposit - Rs. 500.00

Perfected tenders to be sent to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box, kept at the Registrar's office, University of Jaffna on or before 02 - 02 - 2000 at 10.00 a.m.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Maintenance branch of this University during office hours if necessary.

**Dr. K. Kunarasa**
Registrar

University of Jaffna,
P. O. Box. 57,
Thirunelvely,
Jaffna.
(C/10598)

## நினைவஞ்சலி



மலர்வு 10 — 07 — 1932

உதிர்வு 15 — 12 — 1999

**திருமதி செல்லத்துரை அன்னம்மா**

எமது அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு
எம்மை தெய்வச் சுடரொளியாய்
நின்று வாழ்விக்க யாசிக்கின்றோம்.

- குடும்பத்தினர்

இணுவில் மேற்கு,
(72603)

# உதயன்

## ஆபத்துக்கு அத்திவாரமா?

ஜனாதிபதி பிரேமதாச காலத்து கொலை யுகத்துக்கு சாவுமணி அடித்துப் பத்திரிகைச் சுதந்திரத்தையும் கருத்து வெளியிடும் சுதந்திரத்தையும் நிலைநிறுத்துவோம் என்ற உறுதிமொழியுடன் ஆட்சிக்கு வந்தவர் சந்திரிகா.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை அவரது முதலாவது பதவிக் காலத்தில் அதனை கணிசமான அளவு செயலுருவிலும் காட்டியிருந்தார். ஆனால் இரண்டாவது பதவிக் காலத்தின் ஆரம்பத்திலோ வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிவிட்டது போன்ற நிலைமை தோன்றியிருக்கின்றது.

ஜனாதிபதியைப் படுகொலை செய்யும் சதியில் அரசாங்கத்தை விமர்சிக்கும் பத்திரிகைகளை — பத்திரிகையாளர்களை — சம்பந்தப்படுத்தும் பிரசாரம் அதனைத் தான் தொட்டுக் காட்டுகிறது.

சென்ற வாரம் ரூபவாஹினிக்கு அளித்த மூன்று மணி நேர நேரடிச் செவ்வியில் பல பத்திரிகையாளர்களைப் பெயர் குறிப்பிட்டு 'கடுமையாகக் கண்டித்து விமர்சித்தார் ஜனாதிபதி. அது முடிந்த கையோடு அவர்கள் ஜனாதிபதியைக் கொல்லச் சதி செய்த குற்றச்சாட்டோடு சம்பந்தப்படுத்தி அரச பிரசாரம் முழு மூச்சாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

அரச தரப்பின் இந்தப் போக்கை வெகுஜன ஊடக அமைப்புகள் பலவும் மிகக் கடுமையாகக் கண்டித்திருக்கின்றன.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் சந்திரிகாவுக்கு எதிராக — ஐ. தே. கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக — செய்திகளை வெளியிட்டமைக்கு பழி வாங்கும் ஏற்பாடுகளே இப்போது நடப்பதாகச் சந்தேகிக்க வேண்டி உள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்போரை ஜனாதிபதி எச்சரித்த கையோடு, புலிகள் ஆதரவுப் போக்குடைய குமார் பொன்னம்பலம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

குமாரைக் கொலை செய்ததாகக் கூறும் சிங்கள அமைப்பு புலிகளுடன் தொடர்புடையவர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் விமர்சிக்கும் பத்திரிகையாளர்களைப் புலிகளுடன் இணைக்கும் பிரசாரத்தை அரசுத் தரப்பு முடுக்கி விட்டிருப்பது ஆபத்தான சூழ்நிலைக்கு அத்திவாரம் போடும் என்றே கருதலாம்.

தற்போதைய பிரசாரங்களினால் தெற்கில் பொங்கி எழும் உணர்வலைகள் மேலும் பலரை பத்திரிகையாளர் ரிச்சர்ட் டி சொய்ஸாவின் நிலைக்கு உள்ளாக்கும் என அஞ்சப்படுகிறது. அதனால் பத்திரிகைச் சுதந்திரத்துக்கும் மக்களின் தகவல் அறியும் உரிமைக்கும் பங்கம் உண்டாகும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

ஜனநாயகத்தின் நான்காவது தூணான பத்திரிகைத் துறையை சட்டத்திற்கு அப்பாற்பட்ட முறையில், நீதியற்ற வகையில் அடக்கவும் நசுக்கவும் முயல்வது மக்களால் தெரிவு செய்யப்பட்ட எந்த அரசாங்கத்துக்கும் கேட்டையே தரும். மக்கள் அளித்த அதிகாரங்களை மனம்போன போக்கில் பயன்படுத்த முனைந்த அரசுகள் பலவற்றுக்கு நேர்ந்த கதியை இன்றைய ஆட்சியாளர்கள் உணர்வது நல்லது.

குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில்

# சுமார் ஆயிரத்து 300 மீனவர்களின் உபகரணங்கள் கடலில் முடக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 12

மீன்பிடிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதை அடுத்து குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் சுமார் 30 கோடி ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் முடக்கப்பட்ட நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடைசியாகத் தொழிலுக்குச் சென்ற போது மீனவர்கள் கரையில் விட்டு வந்த உபகரணங்களே கடந்த சுமார் ஒரு மாத காலமாக கடலில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

குருநகர், பாசையூர், கொழும்புத்துறை மற்றும் கோயிலாக்கண்டி ஆகிய இடங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 300 மீனவர்களின் உபகரணங்களே இவ்வாறு கடலில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

இந்த உபகரணங்களை மீட்பதற்கு அனுமதி பெறுவது தொடர்பாக யாழ். மாவட்டக்கடற்றொழில் விரிவாக்க அதிகாரி எஸ். ஏ. யோசப் நேற்று முன்தினம் 512 ஆவது படையணி அதிகாரியுடன் தொடர்பு கொண்டு பேசினார்.

கடற்படை அதிகாரி மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஆலோசித்த பின்னரே இதுவிடயத்தில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும் என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக அறியவந்தது.

இதேவேளை —

வேறு கடற்பகுதியில் தொழில் செய்வதற்கு தமக்கு வசதி செய்துதருமாறு இப்பகுதி மீனவர்கள் கடற்றொழில் விரிவாக்க அதிகாரியிடம் கோரி உள்ளனர்.

தொழில் செய்ய அனுமதி கோருவது தொடர்பாக தீவகப்பகுதி மீனவர் சங்கங்களுடன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே கோயிலாக்கண்டிப் பகுதியைச் சேர்ந்த 20 மீனவர்களுக்கு தொழில் செய்வதற்குரிய அனுமதியை வேலணைத்துறையூர் கடற்றொழிலாளர் சங்கம் வழங்கியுள்ளதாக கைதடி நாவற்குழி மீனவர்சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (ஐ-10)

## நிறை குறைந்த பாண் விற்பனை

தென்மராட்சி, ஜன. 12

தென்மராட்சிப் பகுதியில் உள்ள கடைகளில் அண்மைக்காலமாக நிறைகுறைந்த பாண் விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் பாண் விலை குறைக்கப்பட்ட பின்னரே நிறைகுறைந்த பாண் உற்பத்தி செய்யப்பட்டு கடைகளுக்கு வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

350 கிராம் பாணின் விலை ரூபா 8.50 என நிர்ணயிக்கப்பட்டுள்ள போதிலும் தற்போது 300 கிராமுக்குக் குறைந்த நிறையுடைய பாணே விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

நிறை குறைந்த பாண் விற்பனைசெய்யப்படுவது குறித்து உரிய அதிகாரிகள், பேக்கரி உரிமையாளர் சங்கம் ஆகியவற்றுக்கு முறையிட்டும் பயன் கிடைக்கவில்லை எனவும்—

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் உள்ளபாவனையாளர் பாதுகாப்புச் சங்கங்கள் இந்த விடயத்தில் நடவடிக்கை மேற்கொண்டு முன்னரைப் போல் 350 கிராம் பாண் நிர்ணய விலைக்கு கிடைக்க வழி செய்யவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (இ-117)

## அதிகரிப்பு

வேலணைப் பகுதியில் மீன் விலை அதிகரித்து வருகிறது.

இங்கு பிடிக்கப்படும் மீன் பெருமளவில் யாழ். நகருக்கு விற்பனைக்காக எடுத்துச் செல்லப்படுவதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

மீனுக்கு நியாயமான விலையை நிர்ணயித்து உள்ளூர்வாசிகளுக்கு மீன் தாராளமாகக் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## ஆபத்துக் கால ஊக்குவிப்புப் படி

வலி. தென்மேற்கு, ஜன. 12

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஆபத்துக்கால ஊக்குவிப்புப் படி வழங்கப்படவுள்ளது.

இதற்கான சுற்றறிக்கை வடக்கு — கிழக்கு மாகாண அமைச்சினால் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையிலான காலப் பகுதிக்கு இக் கொடுப்பனவுகளை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. (க-185)

## குடிதண்ணீர்த் திட்டம்

சங்கானை, ஜன. 12

சங்கானை தெற்கு ஜே.180 கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கான குடி தண்ணீர்த் திட்டம், அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தால் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தியடைந்துள்ளது.

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலகப் பிரிவினால் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்தத் திட்டத்தின் மூலம் சங்கானை தெற்கு கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட சங்கரத்தைவீதி, திரவியம் வீதி, பட்டினசபை வீதி ஆகியவற்றில் வசித்துவரும் 250 குடும்பங்கள் பயன்பெறவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் ரூபா 5 இலட்சம் செலவில் 8 நீர்த் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன.

எதிர்வரும் பொங்கல் திருநாளன்று சம்பிரதாய முறையில் நீர் விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளது. (இ-24)

# காலம் கடந்த பிறப்புச் சான்றிதழ்பெற மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள காலம் கடந்த பிறப்புக்களை பதிவு செய்து பிறப்புச்சான்றிதழ் வழங்குவதற்கு பிரதேச செயலர் கா. சந்திரராசா நடவடிக்கை எடுத்துள்ளார்.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 25 கிராம உத்தியோகத்தர்களுக்கும் காலம் கடந்த பிறப்புக்களை பதிவுசெய்வது தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் நடத்தப்பட்டது.

காலம் கடந்த பிறப்புச் சான்றிதழ்களைப் பெற பொதுமக்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுவது தொடர்பாக பிரதேச செயலரின் ஏற்பாட்டில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ். மாவட்ட மேலதிக உதவிப் பதிவாளர் நாயகத்தினால் இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

18 வயதுக்கு உட்பட்ட ஒருவரின் காலம் கடந்த பிறப்பை பதிவு செய்வதற்கு தந்தை அல்லது தாய் பிரதிக்கினைப் படிவத்தைப் பூர்த்தி செய்து சமாதான நீதிவான் முன்னிலையில் 5ரூபா பெறுமதியான முத்திரையின் மேல் ஒப்பமிட்டு உறுதிப்படுத்த வேண்டும்.

## செய்தி மடல்

18 வயதுக்கு மேற்பட்ட ஒருவர் தாமே தமது காலம் கடந்த பிறப்பைப்பதிவு செய்வதற்கு பிரதிக்கினைப் படிவத்தை மேலே குறிப்பிடப்பட்டது போல பூர்த்தி செய்ய வேண்டும்

### தேவையான ஆவணங்கள்

காலம் கடந்த பிறப்பைப் பதிவுசெய்வதற்குத் தேவையான ஆவணங்கள்வருமாறு:—

★ வைத்தியசாலையில் பிறந்தவரானால் பொறுப்பதிகாரியின் சான்றிதழ்.

★ வீட்டில் பிறந்தவரானால் அப்பகுதி மருத்துவமாதினால் வழங்கப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம்—தடுப்பூசிகள் ஏற்றப்பட்டிருந்தால் அதற்கான அட்டை (அம்மா காட்)

★ சாதகம்அல்லது ஞானஸ்நான சான்று தாய் தந்தை ஆகிய இருவரினதும் பிறப்புச் சான்றிதழ்கள்இல்லையெனில் பிறப்பு,சான்றிதழ்களின் தேடுதலின் விளைவு

★ குடும்பத்தில் உள்ளசகல பிள்ளைகளினதும் பெயர்கள், பிறந்த திகதிகள் போன்ற விபரங்கள்.

★ பிறப்புப் பதிவு செய்ய வேண்டியவருக்குநேரே மூத்த நேரே இளைய பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்கள்.

★ பெற்றோரின் விவாகப் பதிவுச் சான்றிதழ். விவாகம் பதிவு செய்யப்படாமல் விவாகம் மதகுருவினால் நிறைவேற்றப்பட்டதானால் மதகுருவின் சான்றிதழ்-

★ விவாகம் பதிவு செய்யப்படாமலும் மதகுருவினாலும் நிறைவேற்றப்படாமலும் இருந்தால் ''லௌகிக வாழ்க்கையை'' அடிப்படையாகக் கொண்டு பதிவாளர் மூலம் திருமணத்தைப் பதிவு செய்த சான்றிதழ்.

★ பாடசாலையில் கல்வி கற்பவரானால் பாடசாலை அதிபரிடம் அவர் சேர்ந்த காலம் சேர்விலக்கத் திகதியுடன் கல்வி கற்கும் ஆண்டையும் பிறந்த திகதியையும் உறுதிப்படுத்திய கடிதம் அதிபரால் உறுதிப்படுத்த முடியாத பட்சத்தில் அந்தப்பாடசாலையில் நீண்ட காலமாக சேவையாற்றிய ஆசிரியர் ஒருவரிடம் இருந்து பெறப்பட்ட கடிதத்தை அதிபர் மேலொப்பமிட்டு வழங்கலாம்.

★ கிராம அலுவலரின் பிறப்பைப் பற்றிய சான்றிதழ்.

### தேடுதலுக்கு 4 பத்துரூபா முத்திரைகள்

குறித்த பிள்ளையின் பிறப்பு உண்மையில் ஏற்கனவே பதிவுசெய்யப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு பிள்ளை பிறந்த வருடத்துக்கு முதல் இரண்டு வருடங்களில் இருந்து தொடர்ச்சியாக நான்கு வருடங்களுக்கு பதிவுப் புத்தகங்களில் தேடுதல் மேற்கொள்ளும் பொருட்டு நான்கு பத்துரூபா பெறுமதியான முத்திரைகள் இணைக்கப்பட வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படும் காலம் கடந்த பிறப்புக்கள் மேலதிக மாவட்டப் பதிவாளரின் விசாரணையின் பின்னர் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் காலம் கடந்த பிறப்புக்களை பதிவு செய்வதற்கு சுமார் 60 விண்ணப்பங்கள் பிரதேச செயலகத்துக்கு கிடைத்துள்ளன.

யாழ். மாவட்ட மேலதிக பதிவாளரை பிரதேச செயலகத்துக்கு அழைத்து பிரதேச செயலகத்தில் வைத்து விசாரணைகளை மேற்கொண்டு உடனேயே பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

ஆதலால் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் மேலே குறிப்பிடப்பட்ட ஆவணங்களைத் தயார்படுத்த வேண்டியது அவசியமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

வலி மேற்குச் செய்தியாளர்

## நாளை

மார்கழி 29

வியாழக்கிழமை

திதி: ஸப்தமி

பின் இரவு 3.43 வரை.

நட்சத்திரம்: உத்தரட்டாதி

பிற்பகல் 4. 13 வரை.

சுபநேரம்: 8.03—9.33

ராகுகாலம்: 2.03—3.33

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

துயரமான எண்ணங்களை வெளியிடுபவைகளே இனிமையான கவிதைகளாகும்.

-கீட்ஸ்

# விளையாட்டரங்கு

## யாழ். குடாநாட்டில் விக்ரம் - ராஜன் - கங்கு கிரிக்கெட் போட்டித் தொடர்

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகத்தின் ஏற்பாட்டில் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையேயான 'விக்ரம் — ராஜன் - கங்கு' ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டித் தொடர் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது.

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி, ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி, மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி யாழ். பல்கலைக்கழக அணி ஆகிய அழைக்கப்பட்ட 4 அணிகள் பங்குபற்றும் இந்தச் சுற்றுப்போட்டியின் முதற்சுற்று ஆட்டங்கள் 30 ஓவர்கள் கொண்டதாகவும் இறுதி ஆட்டம் 40 ஓவர்கள் கொண்டதாகவும் இருக்கும்.

புத்தாயிரமாம் ஆண்டில் குடாநாட்டில் நடைபெறவுள்ள முதலாவது கிரிக்கெட் போட்டித்தொடர் இது என்றும் —

இந்தப் போட்டித் தொடரை நடத்துவதற்கு யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் அனுமதி வழங்கியுள்ளது என்றும்—

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் எஸ்.ரஜீவன் தெரிவித்தார். (இ-4-8)

## பாகிஸ்தான் செல்லும் அணியில் இடம்பெறும் இலங்கை வீரர்கள்

கொழும்பு, ஜன. 12

இலங்கை — பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நடைபெறவுள்ள டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டித் தொடர்களில் விளையாடும் இலங்கை அணியில் 24 வீரர்களின் பெயர்ப் பட்டியலை இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சங்கம் வெளியிட்டுள்ளது.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:

சனத் ஜெசூரிய (அணித் தலைவர்), மகில ஜெயவர்த்தன (உதவி அணித்தலைவர்), மார்வன் அத்தப்பத்து, ரசல் ஆர்னல்ட், திலகரட்ண டில்ஷான், இந்திக டிசேரம், சமர சில்வா, அர்ஜுனரணதுங்க, உபகே பெர்னாண்டோ, குமார் சங்கரா, றொமேஷ் கலுவிதாரண, பிரசன்ன ஜெயவர்த்தன, முத்தையா முரளிதரன், ரங்கன ஹெரத், உபுள் சந்தன, நிமேஷ் பெரேரா, சமிந்த வாஸ், பிரமோதய விக்ரமசிங்க, ரவீந்திர புஷ்பகுமார, நுவான் சொய்ஸா, இந்திக கலகே, சஜீவ டி சில்வா, எரிக் உபசாந்த.

மேற்படி அணியில் வேகப்பந்து வீச்சாளர் சுரேஷ் பெரேரா தோள்ப்பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாக அணியில் இடம்பெறவில்லை.

அணியின் மூத்த வீரரான ஹஷான் திலகரட்ண உள்ளூர்ப் போட்டிகளில் சிறப்பாக விளையாடித் தனது ஆட்டத்தின் ஸ்திர நிலையைத் தொடர்ந்து உறுதிப்படுத்தி வந்தபோதும் அவரது பெயர் அணிவீரர்கள் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. (இ-4-8)

## யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட அணி தெரிவு

யாழ்ப்பாணம், ஜன. 12

13, 15 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட அணிகள் மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தால் தெரிவு செய்யப்பட உள்ளன.

இந்த அணித்தெரிவுக்காக பாடசாலைகள், கழகங்களில் இருந்து ஆகக்கூடியது ஐந்து வீராங்கனைகள் தமது பெயர்களை அத்தாட்சிப்படுத்தி நாளைமறுதினம்வெள்ளி பி.ப. 3-30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் சமுகம் தரும்படி சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (இ-4-8)

## ரிவால்டோ முதலிடத்தில்

லண்டன், ஜன. 12

ஸ்பெயினில்பார்ஸிலோனா கழக அணிக்காக விளையாடி வரும் பிறேஸில் வீரர் ரிவால்டோ கடந்த ஆண்டுக்கான அதிசிறந்த ஐரோப்பியஉதைபந்தாட்டவீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு நடந்து முடிந்த ஸ்பானிஸ் லீக் சம்பியன் பட்டத்தை பார்ஸிலோனா கழகம் வெல்வதற்கு இவரது பங்கினை கருத்தில் கொண்டே இவர் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய சம்பியனான 'மன்செஸ்டர் யுனைற்றெட்' அணியின் மத்தியவரிசை வீரரும் இங்கிலாந்தின் தேசிய வீரருமான டேவிட் பெக்ஹம் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

அதேவேளை 1998 ஆம் ஆண்டு இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்த ரொனால்டோவும் மூன்றாம் இடத்தைப் பெற்ற டேவோ ருக்கரும் இம்முறை முதல் பத்து இடங்களுக்குள்ளும் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-4-8)

## தென் ஆபிரிக்க - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் இறுதி டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் ஆரம்பம்

தென்ஆபிரிக்க — இங்கிலாந்து அணிகளுக்கு இடையே தென்ஆபிரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டித் தொடரின் ஐந்தாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி தென் ஆபிரிக்காவில் ஆரம்பமாக உள்ளது.

நடைபெற்று முடிந்த நான்கு டெஸ்ட் போட்டிகளில் தென்ஆபிரிக்க அணி இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று முன்னணியில் உள்ளது.

ஐந்து டெஸ்ட் போட்டிகளும் நிறைவடைந்ததும் தென்ஆபிரிக்கா,இங்கிலாந்து, ஸிம்பாப்வே அணிகள் பங்குபற்றும் முத்தரப்பு கிரிக்கெட் போட்டித்தொடர் இம்மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது. (இ-8-4)

## பயணப் பாதுகாப்பு அனுமதி...

(மூன்றாம் பக்கத் தொடர்)

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 8 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

### சாவகச்சேரி

(038352ஏ), (038352பி), (123325ஏ), (126016ஏ), (126016பி), (126175ஏ), (126248ஏ), (126268ஏ), (126268பி), (126305ஏ), 126331ஏ), (126336ஏ), (126337ஏ), (126337பி), (126337சி), (126356ஏ), (126359ஏ).

[126359 பி], [126381ஏ], [126381 பி],

[126383 ஏ] [126383பி], [126383 சி], [126394 ஏ], [126394 பி], [126395 ஏ], [126395 பி], [126396 ஏ], [126396 பி], [126396 சி],

[126399ஏ], [126399பி], [126400 ஏ], [126420 ஏ], [126420 பி], [126461பி], [126467 ஏ], [126477 ஏ], [126477பி], (126461ஏ),

(126477 சி], [12677 டி], [126477 ஈ], [126489 ஏ], [126489 பி], (126501 ஏ), (126501 பி), (126501 சி), (126755 ஏ), (126865 ஏ).

(126865 பி), (127869ஏ), (127875 ஏ), (127875 பி), (127875 சி), (127875 டி), (127876 ஏ), (127876 பி), (127876 சி), (127876 டி),

(127877 ஏ), (127877பி), (127878 ஏ), (127933 ஏ), (127933 பி), (128002 ஏ), (128002 பி), (128002சி), (128002 டி), (128002 ஈ), (128002 எவ்), (128006 ஏ),

(128006பி), (128006சி), (128007ஏ), (128007பி), (128017ஏ), (128017பி), (128019ஏ), (128019பி)

(128020ஏ), (128020பி), (128023ஏ), (128023பி), (128029ஏ), (128029பி), (128029சி), (128029டி), (128033ஏ) (128035ஏ),

(128039ஏ), (128039பி) (128040ஏ), (128040பி), (128041ஏ), (128041பி), (128041சி), (128042ஏ), (128042பி), (128042சி), (128052ஏ), (128058ஏ), (128059ஏ), (121011ஏ), (121011பி), (121022ஏ), (121022பி), (121022சி), (121022டி), (121023ஏ), (121023பி), (134883ஏ), (134883பி),

### யாழ்ப்பாணம்

(122628ஏ), (122628பி), (122628சி), (128702ஏ), (130029ஏ), (133732ஏ), (133732பி),

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் [இம் மாதம் 11 ஆம் திகதி வரை] பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

### சாவகச்சேரி

[120906ஏ], [120906பி], [126189ஏ], [125273ஏ], [126273பி], [126317ஏ], 126317பி], [126 317சி], [126317டி], [126321ஏ],,

[126321பி], [126326ஏ], [126326பி], [126345ஏ], [126345பி], [126352ஏ], [126352பி], [126353ஏ[, [126357ஏ], [126361ஏ].

[126376ஏ], [126376பி], [126380ஏ], [126387ஏ], [126387பி], [126387சி], (126398 ஏ), (126462 ஏ)' (126502 ஏ), (126502 பி)

(126502 சி), (126507ஏ), (126507 பி), (126507 சி), (126507 டி), (126508 ஏ), (126509 ஏ), (126509 பி), (126510 ஏ), (126510 பி),

(1278082ஏ), (1278082பி) (127863 ஏ), (127863 பி), (127864 ஏ), (127864 பி), (127866 ஏ), (127867 ஏ), (127868 ஏ), (127873 ஏ), (127873 பி)

(127880ஏ), (127883ஏ), (127883பி), (127883சி), (127884ஏ), (127885ஏ), (127890ஏ), (127890பி), (127890சி).

(127890டி), (127890ஈ), (127891ஏ), (127891பி), (127894ஏ), (127894பி), (127896ஏ), (127899ஏ), (127899பி), (127902ஏ),

(127902பி), (128904ஏ), (127904பி), (127904சி), (127904டி), (127905ஏ), (125905பி). (127905சி), (127905டி), (127914ஏ),

(127914பி), (127914சி), (127914டி), (127914ஈ), (127915ஏ), (127916ஏ), (127917ஏ), (127917பி), (127918ஏ), (127918பி),

(127918சி), (127918டி), (127918ஈ), (127918எவ்), (127919ஏ), (127920ஏ), (127920பி), (127920சி), (127920டி), (127920ஈ),

(127921ஏ), (127921பி), (127924ஏ), (127925ஏ), (127925பி), (127925சி), (127926ஏ), (127926பி), (127926சி),

(127928ஏ), (127928பி), (127928சி), (127928டி), (127928ஈ), (127941ஏ), (127941பி), (127941சி), (127942ஏ), (127942பி),

(127942சி), (127943ஏ), (127943பி), (127946ஏ), (127947ஏ), (127948ஏ), (127951ஏ), (127951பி), (127951சி), (127953ஏ),

(127953பி), (127954ஏ), (127954பி), (127958ஏ), (127973ஏ), (127973பி), (127973சி), (127974ஏ), (127982ஏ), (127982பி), (127988ஏ), (128001ஏ), (128001பி), (128001டி), (128001சி), (128004ஏ), (128005ஏ), (128005பி), (128008ஏ), (128008பி), (128009ஏ), (128009பி),

(128011ஏ), (128011பி), (128012ஏ), (128012பி), (128015ஏ), (128015பி), (128018ஏ), (128018பி), (128021ஏ), (128021ஏ),

(128032ஏ), (128032பி), (128053ஏ), (128054ஏ), (128055ஏ), (128056ஏ), (128056பி), (128057ஏ), (128057பி), (128060ஏ),

(128060பி), (128060சி), (128060டி), (031930ஏ), (126080ஏ), (126080பி), (126080சி), (126080டி), (126080ஈ), (126080எவ்), (126080ஜி), (134917ஏ), (134917பி), (134917சி), (134922ஏ)-

### யாழ்ப்பாணம்

(133206ஏ), 126986ஏ), (126986பி), (126986சி), (126986டி), (128484ஏ), (128484பி), (128535ஏ), (128627ஏ), (128627பி), 128684ஏ), (128688ஏ), (128688பி)' (128727ஏ), (128727பி), (128743ஏ), (128847ஏ), (130025ஏ), (130025பி), (130033ஏ),

(133422ஏ), (133422பி), (133422சி),

[133422டி], (133808 ஏ], [133808 பி], [133808 சி], [133808 டி], ]133808 ஈ],

### கரவெட்டி

[119128 ஏ],[119128 பி], [122237 ஏ], [122237 பி], [125607 ஏ], [125888 ஏ], [125888 பி], [127562 ஏ], [127573 ஏ], [127573 பி],

[127573 சி] [127573 டி], [127573 ஈ], [127590 ஏ], [127613 ஏ], [127626 ஏ], [127626 பி[, [127663 ஏ], [127663 பி], [127663 சி], [127663டி[.

[127673ஏ], [127673பி], [127673சி], [127674ஏ], [127786ஏ), [127786பி], [129382ஏ], [129398ஏ], [129517ஏ].

[132757ஏ], [132933பி], [132963ஏ], [132963பி); [132963சி], [132963டி].

### கோப்பாய்

[123174ஏ], [128247பி], [128270ஏ], [128270பி], [128271ஏ], [128271பி], [128271சி], [128271டி].

[128287ஏ], [128290ஏ], [128291ஏ], [128292ஏ [128292பி], [128292சி], [128293ஏ], [128293பி], [128293சி], [133179ஏ], [133179பி], [133198ஏ].

### மருதங்கேணி

[127733ஏ], [127733பி].

### நல்லூர்

[122939ஏ], [122942ஏ], [122942பி], [122942சி], [122994ஏ], [123035ஏ], [123035பி], [123035சி], [123035டி], [123042ஏ],

[124225ஏ], [124226ஏ], ]128101ஏ], [128104ஏ], [128247ஏ], [128278ஏ], (128300 ஏ), (128300 பி), (133014 ஏ), (133218 ஏ), (133285 ஏ), (133207ஏ)

### பருத்தித்துறை

(120136 ஏ),(125733 ஏ), (127509 ஏ) (127509 பி) (127530 ஏ), (127543 ஏ), (127569 ஏ), (127724 ஏ), (127724 பி), (127724 சி), (129407 ஏ)

(129407 பி),(129467 ஏ), (129564 ஏ), (132735 ஏ), (132735 பி), (132783 ஏ), (132783 பி), (132783சி), (132881 ஏ), (132903 ஏ), (132904 ஏ), (132933 ஏ), (132955 ஏ), (132974ஏ)

### உடுவில்

(128110 ஏ)


கணக்கீடு
PERSONAL CLASS
A/L 2001
(இரு: பாலவாசன்)
கட்டுப்பாட்டுக் கணக்கு
ஆரம்பம்:
18 – 01 – 2000
6-20 A. M.
சயன்ஸ் அக்கடமி
நல்லூர்
குறிப்பு: 17 ஆம் திகதி வரையே அனுமதிகள் வழங்கப்படும்.
(72619)



சுன்னாகம் பல நோ.கூ.சங்கம்(வ-து)
சுன்னாகம்.
கூறுவிலை

மேற்படி சங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள இரண்டு சக்கர உழவு இயந்திரத்துக்குப் பின் பெட்டி செய்வதற்கு கூறுவிலைகள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் பத்திரங்களையும் மற்றும் விவரங்களையும் சங்கத் தலைமைச் செயலகத்தில் பெற்று 18-1-2000 ஆம் திகதிக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கும் வண்ணம் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்.
சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
சுன்னாகம்.
01.01.2000 (சி/10599)

# தொடர்ந்து பெய்துவரும் மழையினால் விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டம்

யாழ்ப்பாணம், ஜன. 12

தற்போது தொடர்ந்து பெய்துவரும் மழையினால் விவசாயிகள் நஷ்டம் அடையும் நிலைமை உருவாகி வருகிறது.

நெற்பயிர் கதிர் கட்டியுள்ள இவ்வேளையில், வயலில் தேங்கிநிற்கும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் முற்றிய, முற்றாத அனைத்து கதிர்களுமே சேதமடைந்து வருகின்றன.

இதேவேளை மேட்டுநிலப் பயிர்ச் செய்கையாளர்களும் நஷ்டமடைந்துள்ளனர். வெங்காயம், மிளகாய், புகையிலைக் கன்றுகள் வெள்ளத்தில் மூழ்கி வேர் அழுகி பயிர்கள் பழுதடைந்து வருகின்றன.

இதுபோன்ற அழிவுகளுடன், புத்தூர் கிழக்குப் பகுதியில் உள்ள நெல் வயல்களில் மற்றுமொரு அழிவும் ஏற்பட்டு வருகிறது. எலிகள் கதிருடன் நெற்பயிர்களை வெட்டி நாசம் செய்து வருகின்றன.

[இ-15]

## மானிப்பாயில் சமூகவிவகார சபை

வலிகாமம் தெற்கு, ஜன. 12

சுகாதாரம், மருத்துவம், சமூக சுற்றாடல் என்பனவற்றில் நலிவுற்ற மக்களுக்குச் சேவை செய்வதற்கென அமைக்கப்பட்ட மானிப்பாய் சுகாதார, சமூக, சுற்றாடல் விவகார சபை புத்தாயிரமாம் ஆண்டில் பல செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்த இருப்பதாக அதன் தலைவரும் மானிப்பாய் ஸ்ரீ சத்தியசாயி நிலையத் தலைவருமான இரா. வசந்தசேனன் தெரிவித்தார்.

மானிப்பாய் கோவில்பற்று மக்களின் சுகாதார, மருத்துவ வசதிகளில் காணப்படும் குறைபாடுகளை நீக்கவும், முதியவர்களைப் பராமரிக்க ஏதுவான ஒரு முதியோர் இல்லத்தை மானிப்பாய் பிரதேசத்தில் அமைக்கவும் மேற்படி சபை தீர்மானித்துள்ளதாக அவர் கூறினார்.

சுகாதார மற்றும் வைத்திய வசதிகளில் காணப்படும் குறைபாடுகளைப் போக்குவதற்குப் பின்வரும் நடவடிக்கைகளை இச் சபையினர் எடுக்க உள்ளனர்.

★ தற்போது இப் பகுதியில் இயங்கிவரும் மருந்தகத்தைக் கிராமிய வைத்திய சாலையாகத் தரமுயர்த்தி அவ் வைத்தியசாலையை நிறுவுவதற்கு வேண்டிய காணிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

★ வைத்திய ஆலோசனைகளையும் வைத்திய வசதிகளையும் இப் பகுதி மக்கள் குறைந்த செலவில் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக மானிப்பாய் பிரதேசத்தில் ஒரு தனியார் வைத்தியசாலையை அமைத்தல்.

★ மிகவும் வறுமை நிலையில் உள்ள மக்களுக்கு இலவச வைத்திய சிகிச்சைகளைப் பெறுவதற்கு உதவி செய்தல்.

★ மேலும் இப் பிரதேசத்தில் வாழும் முதியவர்களைப் பராமரிக்க எவரும் இல்லாத கட்டத்தில் அவர்களைப் பராமரிக்கவென ஒரு முதியோர் இல்லத்தை அமைத்தல்.

★ எமது இளந் தலைமுறையினர் மட்டத்தில் மனித மேம்பாடுகள் பற்றி விளக்கமளித்து, அவற்றைக் கடைப்பிடிக்க வைத்து அவர்களை உத்தமசீலர்களாக வாழவைக்க ஸ்ரீ சத்தியசாயி நிறுவனத்தின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளல்.

★ மக்களின் கலை, கலாசாரம், ஆங்கிலக் கல்வி கணனிக் கல்வி என்பவற்றில் கவனம் எடுத்து அவற்றை வளர்த்தல் — போன்ற பல செயற்றிட்டங்களை இவ் வருடத்தில் நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-152)

## பளையில் மீன் நடுகைக்கென தென்னங்கன்றுகள் விநியோகம்

பளைப் பிரதேசத்தில் அழிக்கப்பட்ட தென்னைமரங்களுக்குப் பதிலாக மீள் நடுகைக்கெனத் தென்னை அபிவிருத்திச் சபை தர்மக்கேணித் தோட்ட நாற்று மேடைகளில் பயிரிடப்பட்ட தென்னங்கன்றுகள் மீள் நடுகைத் திட்டத்தின்கீழ் குடியிருப்பாளர்களுக்கு மானிய அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

தென்னங் கன்றுகளைக் குடியிருப்பாளர்களுக்கு உத்தியோகபூர்வமாக வழங்கும் வைபவம் கடந்த வாரம் பளைப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தலைமையில் நடைபெற்றது.

முதற்கட்டமாக நாற்று மேடையில் உள்ள 5 ஆயிரம் தென்னங்கன்றுகள் சகல கிராம அலுவலர் பிரிவுகளிலும் உள்ள நிரந்தர குடியிருப்பாளர்களுக்குத் தலா மூன்று கன்றுகள் வீதம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பளைப் பிரதேசத்தில் தென்னை மீள் நடுகைத் திட்டத்திற்கென 17 ஆயிரம் தேங்காய்கள் நாற்றுமேடையில் போடப்பட்டுள்ளதாகவும், இவற்றில் 10 ஆயிரம் தேங்காய்கள் கொழும்பு தென்னை ஆராய்ச்சி சபையினாலும் 5 ஆயிரம் தேங்காய்கள் தென்னை அபிவிருத்திச் சபையினாலும் 2 ஆயிரம் தேங்காய்கள் பளை ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையினாலும் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாற்று மேடையில் உள்ள ஏனைய தென்னங் கன்றுகள் விரைவில் குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)


சுவாமி விவேகானந்தரின்
தேசிய இளைஞர் தினம்

சுவாமி விவேகானந்தரின் திருப்பாதம் பட்ட
யாழ். இந்துக் கல்லூரியில்
ஸ்ரீ ராம கிருஷ்ண - விவேகானந்த
புத்தகக் கண்காட்சி
இன்று (12-01-2000) புதன்கிழமை
காலை 9.30 மணிக்கு
யாழ். இந்துக் கல்லூரி அதிபர்
திரு. அ. சிறிக்குமாரன் அவர்களால்
ஆரம்பித்து வைக்கப்படும்.

செயலாளர்,
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.
(வி/10566)


## வெள்ளத்தில் வீழ்ந்து குழந்தை பலி

வேலணை, ஜன. 12

வீட்டுக்கு அருகேயிருந்த ஒழுங்கையில்—வெள்ளம் நிரம்பிய சிறிய குழி ஒன்றினுள் வீழ்ந்து மூன்றரை வயதுக் குழந்தை ஒன்று மரணமானது.

இச்சம்பவம் வேலணை மேற்கு 7 ஆம் வட்டாரத்தில் கடந்த ஞாயிறு மாலை இடம்பெற்றது.

அவ்விடத்தைச் சேர்ந்த யோகநாதன் பிரதீபன் என்ற குழந்தையே இவ்வாறு பலியானது.

(உ-167)

## தீவகத்தில் இன்று

வேலணை, ஜன. 12

1998 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி. சீ. ஈ. (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தி அடைந்து தொடர்ந்து உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் — வறுமைக் கோட்டின்கீழ் வசிக்கும் — தீவகப் பாடசாலைகளைச் சேர்ந்த — மாணவர்களுக்கு வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநரின் புலமைப் பரிசுத் திட்டத்தின் கீழ் பரிசு வழங்கும் வைபவம் இன்று வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெறும்.

இந்தப் புலமைப் பரிசுத் திட்டத்தின் கீழ் தீவகக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளிலிருந்து 20 மாணவர்களுக்கு ஒருவருக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

தீவகக் கல்வி வலயப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளர் கலாநிதி தணிகாசலம்பிள்ளை பங்குபற்றுவார்.

(உ-8-167)

## பாடசாலைகள் இணைப்பு

தென்மராட்சி, ஜன. 12

கல்வி அமைச்சினால் அண்மையில் வெளியிடப்பட்ட கல்வி மறுசீரமைப்புத் திட்டத்தின் முன்னோடி நடவடிக்கையாக தென்மராட்சி கல்வி வலயத்தில் உள்ள மூன்று பாடசாலைகள் அருகில் உள்ள பாடசாலைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

இதன்பிரகாரம் போக்கட்டி றோமன் கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்துடனும்—

வரணி ஸ்தான அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை வரணி இடைக்குறிச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையுடனும்—

மந்துவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையுடனும் —

இணைக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் நா. சத்தியநாதன் தெரிவித்தார்.

[உ-117]

## உணவகத்தில் திருட்டு

வடமராட்சி, ஜன. 12

பருத்தித்துறையில் உள்ள உணவகம் ஒன்று நள்ளிரவு நேரம் கூரைபிரிக்கப்பட்டு அங்கிருந்து சுமார் ஒரு லட்சம் ரூபா பணம், 5 பவுண் நகை, வானொலிப்பெட்டிகள், சிகரட், பிஸ்கட்வகைகள் என்பன கொள்ளையடிக்கப்பட்டன.

மருதடியில் இருக்கும் மு. ரகுநாதன் என்பவரின் உணவகத்திலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

(ஐ-173)

## வாசகர் திருமுகம்

### யாருக்கு இந்த அதிகாரம்?

கிராம சேவகரின் அனுமதி பெற்று தறித்த அல்லது பல வருடங்களுக்கு முன் தறித்த மரங்களை தேவைகளுக்காக வீதியால் எடுத்து வருவதானால் யாரிடம் அனுமதி பெற வேண்டும்? குறித்த பிரதேச செயலரிடமா? அல்லது அரசமரக் கூட்டுத்தாபன அதிகாரிகளிடமா? உரியவர்கள் இந்த விடயத்தைத் தெளிவுபடுத்த வேண்டும்.

ஏனெனில் தற்போது மரம் ஏதேனும் வீதியால் கொண்டு செல்லப்பட வேண்டுமாயின் மரத்தின் பெறுமதிக்கு ஏற்ப குறிப்பிட்ட வீத பணத்தொகையை மரக் கூட்டுத்தாபன அதிகாரிகளிடம் செலுத்தி அதற்கான அனுமதிப்பத்திரம் பெறவேண்டும். அவ்வாறு அனுமதிப்பத்திரம் பெறப்படும் சமயத்திலேயே மரங்கள் எடுத்துச் செல்லப்படுவதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

இதேவேளை மரங்களைத் தறித்தல் மற்றும் அவற்றை மரக்காலைகளுக்கோ அல்லது தொழில் செய்யும் இடங்களுக்கோ எடுத்துச் செல்வதில் பிரதான பங்கு வகிக்கும் முகவர்கள் சிலர் ''எரிகிற வீட்டில் பிடுங்கியது மிச்சம்'' என்பதற்கிணங்க தமது தில்லுமுல்லுகளுக்கு எல்லாம் மரக்கூட்டுத்தாபன அதிகாரிகளைக் காரணம் காட்டியும் வருகின்றனர்.

மரங்களைத் தறிப்பவர்களும் அதனை வேறோர் இடத்துக்கு எடுத்துச் செல்பவர்களும் முகவர்கள் மூலமே அவற்றை எடுத்துச் செல்ல வேண்டுமென மரக் கூட்டுத்தாபன அதிகாரிகள் கூறியிருப்பதாகக் கூறிக்கொண்டு திரிகின்றனர். அதேவேளை அந்த அதிகாரிகளுக்கு ஒரு பகுதி பணத்தையும் கொடுக்க வேண்டுமெனவும் தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை களவாகத் தறிக்கப்படும் மரங்களுக்கும் அனுமதி வழங்கப்படுவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இதனால் மரங்களின் பெறுமதி நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் அன்றாடம் மரத் தொழில் செய்து பிழைக்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன.

இந்த நிலை நீடிக்காது தடுக்க உரியவர்கள், உரிய பதில் தருவார்களா?

ப. நாதன்

திருநெல்வேலி.

### நடவடிக்கை எடுக்கப்படுமா?

கடந்த பத்தாண்டுகளில் இடம்பெற்ற வன்செயல்கள், இடம்பெயர்வு ஆகியன காரணமாக மயிலிட்டியில் அமைந்திருந்த காசநோய்க்கான (தனியான) மருத்துவமனை மூடப்பட்டது. பின்னர் வேறு சில வைத்தியசாலைகளில் காசநோய்க்கான சிகிச்சை அளிப்பதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த வகையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் ஆண், பெண் காசநோயாளர்களுக்கான மருத்துவ விடுதி ஒன்று அமைக்கப்பட்டது. சுற்றுப் புறத்தில் மருத்துவமனை ஊழியர்களின் விடுதிகளும் சிறுவர் நோய்ப்பராமரிப்பு நிலையமும் இயங்குவதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளாமல் — பொது மக்கள், பொது நிறுவனங்கள் என்பவற்றின் எதிர்ப்புக்களுக்கு இடையே — அந்த விடுதியில் காசநோயாளர்கள் பராமரிக்கப்பட்டனர்.

நோய் என்பது எவருக்கும் ஏற்படலாம். ஆனால் உரிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் செய்யப்படும் நடவடிக்கைகளுக்கு யார் பொறுப்பாளிகள் ஆவார்கள்?

நோயாளர்கள் குறைவான வைத்தியசாலைகள் பல குடாநாட்டில் காணப்படும் போதும் நோயாளர் செறிவாக உள்ள சாவகச்சேரி மருத்துவமனை இதற்கு தெரிவு செய்யப்பட்டதற்கு மாகாண சுகாதாரப் பணிமனை பதில் தருமா?

தற்போது சாவகச்சேரி மருத்துவமனைச் சுற்றாடலில் தொண்டர் நிறுவனங்களும் மருத்துவ அமைப்புகள் சிலவும் மேற்கொண்ட மருத்துவ ஆய்வுகள் மூலம் (காசநோய் பரிசோதனைகள்) அப்பகுதியில் உள்ள சிலருக்கு காசநோய் பீடித்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்பது நம்பிக்கையாகத் தெரிய வருகிறது.

இவ்வாறான பாதிப்புக்களை உணர்ந்து கொண்டு இந்த விடுதிகளை நோயாளர் செறிவு குறைந்த மருத்துவமனைகளுக்கு இடம்மாற்றம் செய்வது அவசியமாகின்றது. அத்துடன் மாகாண சுகாதார திணைக்களம் சாவகச்சேரி மருத்துவமனை சுற்றாடலில் உள்ள மக்களுக்கு காசநோய்ப் பரிசோதனையை முழு அளவில் மேற்கொள்ள முன்வர வேண்டும்.

மாகாண சுகாதாரத் திணைக்களம் மக்களின் உடல் நலத்தைப்பேணக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா? அல்லது தொண்டர் நிறுவனங்களின் மூலம் உதவி பெற்று காசநோய்க்கான தனியான மருத்துவமனை ஒன்றை வேறு இடத்தில் உருவாக்குமா?

அ.ம. எழிலன்

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

### புலிகளால் அண்மையில் கைப்பற்றப்பட்ட

# வன்னி விளை நிலங்களில் பயிர்ச் செய்கை ஆரம்பம்

வவுனியா, ஜன. 12

வன்னியில் 'ஓயாத அலைகள் – 3' படை நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள விளை நிலங்கள் மீண்டும் பயிர்ச் செய்கைக்காகப் பண்படுத்தப்பட்டு வருகின்றன.

தொடர்ச்சியாக நடைபெற்ற வெற்றி உறுதி, போர்க்கோஷம் படை நடவடிக்கைகள் மூலம் பாதிக்கப்பட்ட விளை நிலங்களும், தூர்ந்துபோன குளங்களும் தற்போது மீளப் புனரமைக்கப்படுகின்றன.

ஒட்டுசுட்டான் பகுதியில் இரண்டாயிரத்து 900 ஏக்கர் பரப்புடைய சிறிய குளங்களும் ஐயாயிரத்து 900 ஏக்கர் பரப்புடைய பெரிய குளங்களும்—

மாந்தை கிழக்குப் பகுதியில் 619ஏக்கர் பரப்புடைய சிறிய குளங்களும் 299 ஏக்கர் பரப்புடைய பெரிய குளங்களும்—

நெடுங்கேணிப் பகுதியில் 4 ஆயிரத்து 968 ஏக்கர் பரப்புடைய சிறிய குளங்களும் 328 ஏக்கர் பரப்புடைய பெரிய குளங்களும்—

பயிர்ச்செய்கைக்காக மீளப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இடம்பெயர்ந்து வாழ்ந்த வன்னி மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறுவதுடன் பாதிக்கப்பட்ட பயிர் நிலங்கள், குளங்கள் என்பனவற்றை சீர் செய்வதிலும் ஈடுபட்டு வருகின்றனர். (இ-8)

## கடந்த ஆண்டில்

# 1,847 காலம் கடந்த பிறப்பு, இறப்புகள் பதிவு

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ். மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகத்தினால் கடந்த வருடம் ஆயிரத்து847 காலங்கடந்த பிறப்பு,இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலதிக உதவிப் பதிவாளர் நாயகமாக யாழ். மேலதிக மாவட்ட பதிவாளர் கடந்த வருடம் நியமிக்கப்பட்டதை அடுத்தே மேற்படி பதிவுகள் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நியமனத்தினால் கடந்த வருடத்தில் 153 அற்றோனித் தத்துவங்களையும் மக்கள் விரைவாகப் பெற்றுக் கொள்ள முடிந்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# அடி,துன்புறுத்தலுக்கு உள்ளான வேலைக்காரசிறுமி ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜன. 12

வீட்டு எஜமானியால் நீண்டகாலமாக அடித்துத் துன்புறுத்தப் பட்டதாகக் கூறப்படும் சிறுமி ஒருத்தி, கை, கால்களில் முறிவு, கண்டல் காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலியில் ஓர் ஆசிரியையின் வீட்டில் இரு வருடங்களுக்கு முன் வீட்டுப் பணிப்பெண்ணாகச் சேர்ந்து அங்கு வேலை செய்துவந்த — மீசாலையைச் சேர்ந்த — ஆறுமுகம் புஸ்பராணி (வயது 14) என்ற சிறுமியே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளவராவார்.

கடந்ததிங்கள்காலை தனது பிள்ளைகளுக்குச் சாப்பிடத் தோசை கொடுத்துவிட்டு வெளியே சென்று ஆசிரியை திரும்பிவந்தபோது வேலைக்காரச் சிறுமி தன் பிள்ளைகளிடம்கொடுத்த தோசையை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்ததைக் கண்டு, ஏன் வாங்கிச் சாப்பிட்டாய் என்று கேட்டுத் தும்புத்தடி மற்றும் விறகினால் அடித்ததாகவும்—

அதைப் பொறுக்க முடியாமல் வீட்டைவிட்டு வெளியேறி ஓடிய அச்சிறுமியை யாரோ ஆஸ்பத்திரியில் சேர்த்ததாகவும்— கூறப்படுகின்றது.

கடந்த இரு வருடங்களாக தொடர்ந்து இதுபோல தனக்கு அடி விழுவதாகவும்—

யாருக்கும் சொல்லக் கூடாது எனத் தன்னைப் பயமுறுத்தி வைத்திருந்ததாகவும் —

அடித்து முறிவுகள் ஏற்பட்டாலும் அதற்கு சிகிச்சைகள் அளிப்பதில்லை எனவும்—

எவ்வளவு நாள்களானாலும் தான் வெறுமனே வேதனையுடன் இருந்து தவறாது வேலைகளும் செய்து வந்ததாகவும்—

—அச்சிறுமி தெரிவித்தார்.

அச்சிறுமியின் மேல்க் கை முறிந்து பின் அப்படியே பொருந்தி வீக்கத்துடன் கை நீட்ட முடியாத நிலையிலும்—

இடது கால் முறிந்து அப்படியே பொருந்தி வீக்கத்துடனும்— காணப்படுகின்றன. (உ-15)

# வீதி ஓர மரங்கள் தறிப்பு

வலி. வடக்கு, ஜன. 12

காங்கேசன்துறை வீதியில் சுன்னாகத்துக்கும் தெல்லிப்பழைக்கும் இடைப்பட்ட பகுதியில் வீதி ஓரங்களில் காணப்படும் மரங்கள் தறிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை மின்சார சபையினால் உயர் மின் அழுத்த வயர்கள் பொருத்துவதற்கு வசதியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆல், வெள்ளரசு போன்ற பெரிய மரங்களும் தறிக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-86)

# வெறிச்சோடும் நாவற்குழிப் பகுதி

யாழ்ப்பாணம், ஜன. 12

நாவற்குழிப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினரால் வீதி ஓரங்களில் உள்ள வேலிகள் வெட்டப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் கடந்த ஒரு மாத காலமாக நிலவி வரும் பதற்றமான சூழ்நிலையைத் தொடர்ந்து இங்குள்ள மக்களில் பலர் வெளியேறிவிட்டனர்.

தற்பொழுது இப்பகுதியில் இராணுவத்தினரின் நடமாட்டமே காணப்படுகிறது.

இதே வேளை இங்கிருந்து இடம் பெயர்ந்த மக்களை பொங்கலுக்கு முன்னர் தமது வீடுகளுக்கு வருமாறு படையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-5)

## பிறப்பு,இறப்பு,விவாக பதிவுச் சான்றிதழ்

# விண்ணப்பித்து பதில் வராதோர் தொடர்பு கொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 12

கடந்த ஆண்டு பிறப்பு இறப்பு விவாகப் பதிவுச் சான்றிதழ்கள் பெறுவதற்கு விண்ணப்பம் செய்து உரிய பதில்கிடைக்காதவர்கள்மேலதிக மாவட்டப் பதிவாளருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

யாழ்ப்பாண காணிப் பதிவகத்திலும் மாவட்ட பதிவகத்திலும் கடந்த வருடம் பெறப்பட்ட உறுதிகள், விண்ணப்பங்கள் தொடர்பிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டுள்ளன என்று மேலதிகமாவட்ட பதிவாளர் என். சதாசிவ ஐயர் தெரிவித்துள்ளார்.

சகல விண்ணப்பங்களுக்கும் உரிய பதில்கள் அனுப்பப்பட்டபோதும் ஓரிரு தவறுகளும் ஏற்பட்டிருக்கலாம் என்றும்— எனவே தமது விண்ணப்பத்துக்குப் பதில் கிடைக்காதவர்களை தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும்— அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-5)

# பெற்றோர் அவதி

வலி.வடக்கு ஜன. 12

யாழ்ப்பாணப் பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதில் பெற்றோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிறிய பாடசாலைகள் முதல் பெரிய பாடசாலைகள் வரை நன்கொடை, அன்பளிப்பு, நூலகக் கட்டணம், ஆய்வுகூடக் கட்டணம் என்று பல்வேறு கட்டணங்களை அறவிடுவதாகக் கூறப்படுகிறது. (இ-86)




## நயினாதீவு

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் மஹாயாக விஞ்ஞாபனம்

## 21 -- 01 -- 2000

புதுயுகமாகிய இரண்டாயிரமாம் ஆண்டில் லோக சேமத்தை முன்னிட்டும் நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவி எங்கும் அன்பும் அருளும் அமைதியும் நிலைக்க வேண்டியும் சக்தி பீடங்களில் ஒன்றாகிய நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தில்

## மஹாயாகம்

**1 ஆம் நாள்**
மார்கழித் திங்கள் 29 ஆம் நாள் 13-01-2000 வியாழக்கிழமை
அம்பிகைக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் விசேட அபிஷேக ஆராதனைகள் மஹா கணபதி ஹோமம்.

**2 ஆம் நாள்**
மார்கழித் திங்கள் 30 ஆம் நாள் 14-01-2000 வெள்ளிக்கிழமை
விசேட அபிஷேகம் அம்பாள் வீதியுலா, ஏகாதசருத்ர ஹோமம், ஸ்கந்த ஹோமம், கடஸ்தாபனம், யாகசாலைப்பிரவேசம் முதலியன.

**3 ஆம் நாள்**
தைத் திங்கள் 1 ஆம் நாள் (தைப் பொங்கல் திருநாள்)
15-01-2000 சனிக்கிழமை
பொங்கல் விழாவும் அம்பாள் திருவீதியுலாவும் தொடர்ந்து யாகபூசை, இலட்சார்ச்சனை, மாலை ஸ்ரீசக்கர பூசை, இலட்சார்ச்சனை.

**4 ஆம் 5 ஆம் 6 ஆம் 7 ஆம் 8 ஆம் நாள்கள்**
(தைத் திங்கள் 2 ஆம் நாள் முதல் 5 ஆம் நாள் வரை)
16-01-2000 ஞாயிற்றுக்கிழமை முதல் 20-01-2000 வியாழக்கிழமை வரை.
யாக பூசை தீபாராதனை, ஸ்ரீசக்கர பூசை, இலட்சார்ச்சனை (இரவு—பூசை) ஸ்ரீசக்கர பூசை, இலட்சார்ச்சனை.

**9 ஆம் நாள்**
தைத் திங்கள் 6 ஆம் நாள் (தைப்பூசத் திருநாள்)
21-01-2000 வெள்ளிக்கிழமை
மஹா பூர்ணாகுதி 108 கலசாபிஷேகம், பூசை, விசேடவழிபாடுடன் தைப்பூச விழாவும் கைலாசவாகனத்தில் அம்பாள் திருவீதியுலாவும் இடம்பெற்று திருவருட் பிரசாதம் வழங்கல், வைரவர் சாந்தி என்பன நடைபெறும்.

இம் மஹாயாகத்தில் சுரிதோஷம், நாகதோஷம், கிரகதோஷம், ஆயுள் விருத்தி, சந்தான விருத்தி, தொழில் விருத்தி, சுமங்கலிப் பிரார்த்தனை என்பனவற்றிற்கு அம்பாளைப் பிரார்த்தித்து இலட்சார்ச்சனையும் பூர்ணாகுதியும் நடைபெறும். இப் பிரார்த்தனையில் பங்குபற்ற விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர், நட்சத்திரங்கள் பற்றிய விவரத்துடன், அறங்காவலர் சபைக் காரியாலயத்தில் தொடர்பு கொண்டால் சபை அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும் என்பதை அடியார்களுக்கு அன்புடன் அறியத் தருகின்றோம்.

இந்த மஹாயாகத்துக்கு நிதியுதவி செய்ய விரும்புவோர் ஆலய அறங்காவலர் சபையினருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் அல்லது வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம் கணக்கு இலக்கம் 12330—வர்த்தக வங்கி, கொழும்பு பெற்றா கணக்கு இலக்கம் 01242628501 ஆகியவற்றில் வைப்புச் செய்து எமக்கு அறியத் தரலாம். நேரடியாக இம் மஹாயாகத்தை முன்னிட்டு, நாம் எவருக்கும் நிதி வசூலிக்கவோ, பொருள் சேகரிக்கவோ அனுமதி வழங்கவில்லை என்பதை அடியார்கள் கவனத்துக்குத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

அம்பிகையின் அடியார்கள் யாவரும் இம் மஹாயாகத்தில் பங்குபற்றி அம்பிகையின் திருவருட்கடாட்சத்தினையும் அனுக்கிரகத்தினையும் பெற்று இப் புத்தாயிரமாம் ஆண்டில் எல்லா நலன்களுடனும் இன்புற்று வாழ வேண்டுமென அம்பிகையின் திருவருள் துணை கொண்டு அன்புடன் வேண்டுகின்றோம். அன்னையின் அருளாசிகள் அனைவருக்கும் கிடைப்பதாக.

தனக்கொருவர் ஒப்பில்லாத் தாயே இந்தத்
தரணிதனில் சாந்தியினைத் தருவாய் நீயே!
இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!

குறிப்பு: வருகை தரும் அடியார்களின் நலன்கருதி போக்குவரத்து, அன்னதானம், தாகசாந்தி, சுகாதார ஒழுங்குகள் என்பன சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளன.

**அறங்காவலர் சபை**
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு.

(72599)



# சப்பிரகமுவா பல்கலைக்கழக

புதுமுக மாணவர்களுக்கான

# அவசர கலந்துரையாடல்

காலம்: 14-01-2000 வெள்ளி மு. ப. 10.30
இடம்: கலைப்பீட மாணவர் ஒன்றிய அலுவலகம்

97, 98ஆம் ஆண்டுகளில் க. பொ. த உ/த எடுத்து மேற்படி பல்கலைக்கழக அனுமதி கிடைத்த அனைத்து மாணவர்களும் தவறாது சமுகம் தரவும்.

செயலாளர்
கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(72598)

# யாழ். ஆஸ்பத்திரிக் கழிவுநீர் பண்ணைப் பகுதியில் தேக்கம்

## பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் ஆபத்து

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ். போதனா வைத்திய சாலையில் இருந்து கழிவு நீரை வெளியேற்றும் குழாய் ஒன்று பண்ணைப் பகுதியில் சேதமடைந்துள்ளதால் அதிலிருந்து வெளியேறிவரும் கழிவு நீரினால் அந்தப் பகுதியில் பாரிய சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

பண்ணைக்கும் தொலைத் தொடர்பு நிலையத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள கழிவு நீர் வெளியேற்றும் குழாய் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக சேதமடைந்துள்ளது. அதிலிருந்து அசுத்த நீர் வெளியேறி அந்தப் பிரதேசத்தில் பரந்து காணப்படுவதாகவும்—

இது தொடர்பாக தீவுப் பகுதி சுகாதார அத்தியட்சகரினால் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரிக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதைத்தொடர்ந்து யாழ். மாநகர சபை ஆணையாளரினால் யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளருக்கு இது தொடர்பான கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டதாகவும்—

தெரிவிக்கப்பட்டது.

எனினும் இதுவரை எந்த வித திருத்த வேலையும் மேற்கொள்ளப்படவில்லை.

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் இந்தக் குழாய் வெடித்துள்ள போதிலும், வைத்திய சாலையின் வேலைத் திட்டத்தின் கீழேயே இது தொடர்பான பணிகள் அடங்குவதால் மாநகர சபையால் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளமுடியாது என்றும்—

யாழ். வைத்தியசாலை நிர்வாகத்தினரே இதற்கான திருத்தவேலைகளைச் செய்ய வேண்டும் என்றும்—

மாநகர சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-9)


# கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்கள வீதி பராமரிப்பு ஒப்பந்தகாரர்

திரு. ஐ. இராமச்சந்திரா

அவர்களின் தாயார்

**திருமதி இராசமணி ஐயாத்துரை**

அவர்களின் மறைவையிட்டு துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரதான பொறியியலாளரும் உத்தியோகத்தர்களும்

வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்.

[72637]



# கண்ணீர் அஞ்சலி

எமது தீவக வலய சங்கீத ஆசிரியை

செல்வி து. உதயமலர்

(யா/ ஊர்காவற்றுறை புனித மரியாள் பெண்கள் பாடசாலை)

அவர்களின் தந்தையாரான

**கார்த்திகேசு துரைராஜா**

அவர்கள் 10 - 01 - 2000 அன்று இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்,
தீவக வலய இசை ஆசிரியர்கள்.

(72625) (இசை ஆசிரியர் மன்றம்)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் பொன்னம்பலம் தர்மகுலசேகரம்**

(கிராம உத்தியோகத்தர், யா/162 அராலி தெற்கு)

தோற்றம்: 23 - 06 - 1956 மறைவு: 12 - 12 - 1999

சைமன் என அன்புடன் அழைக்கப்பட்ட சக உத்தியோகத்தர்கள் மத்தியில் சிரித்த முகத்துடன் நகைச்சுவையாக உரையாடும தர்மகுலசேகரம் சலனம் இல்லாமல் சப்தம் இல்லாமல் சாவு என்ற நிலையில் இறைவனுடன் சங்கமமாகிவிட்டார்.

அன்னாரை இழந்து துயருறும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்ப்பாண மாவட்ட
கிராம உத்தியோகத்தர் சங்கம்.

68, பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (72628)


## கல்வி டிப்ளோமா சான்றிதழ்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஜன. 12

தேசிய கல்வி நிறுவகத்தினால் 1998 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கல்வி டிப்ளோமாப் பரீட்சைகளில் சித்தி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும்—

உரியவர்கள் யாழ். இந்துக் கல்லூரியில் இயங்கும் தேசிய கல்வி நிறுவகத்தின் பிராந்திய நிலையத்தில் தமக்குரிய சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் —

சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி த. வில்வநாதன் அறிவித்துள்ளார். (ஐ-7)

யுனஸ்கோ ஆதரவுடன் நடத்தப்படும்:

# 2ஆம் கட்ட இலக்கிய போட்டி; முதல் 3 இடங்கள் பெற்றோர்

யாழ்ப்பாணம், ஜன. 12

'யுனஸ்கோ' நிகழ்ச்சித் திட்டத்தின் அனுசரணையுடன் யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே அண்மையில் நடத்தப்பட்ட இரண்டாம் கட்ட இலக்கியப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

சித்திரம்

முதலாம் இடம்:- சி. சிற்பனன் (யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி). இரண்டாம் இடம்:- ஆ. மயூரன் (யாழ். இந்துக் கல்லூரி). மூன்றாம் இடம்:- க. ஜெயசாந்தி (யாழ். திருக்குடும்ப மகா வித்தியாலயம்).

கட்டுரை

முதலாம் இடம்:- க. தர்சனன் (யாழ் இந்துக் கல்லூரி). இரண்டாம் இடம்:- ஆ. கனிமொழி (வேம்படி மகளிர்கல்லூரி), மூன்றாம் இடம்:- ந. பிரபு (யாழ். இந்துக் கல்லூரி).

கவிதை

முதலாம் இடம்:- ச. சர்மிளா (யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி). இரண்டாம் இடம்:- தெ. சுதாஜினி (கோப்பாய் மகா வித்தியாலயம்), மூன்றாம் இடம்:- ந. நியாசநிதி (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

நாடகம்

முதலாம் இடம்:- வேம்படி மகளிர் கல்லூரி.

இவர்களுக்கான பணப்பரிசுகள் யாவும் பாடசாலை அதிபர்கள் ஊடாக இவர்களின் பெற்றோர்கள் முன்னிலையில் வழங்கப்படவுள்ளதாக கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களும் குழுக்களும் மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

(இ-10)

# அரசாங்க ஊழியர்களுக்கு ரூபா 1,000 விசேட முற்பணம்

வேலணை, ஜன. 12

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இவ்வாண்டு ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத விசேட முற்பணம் வழங்கப்படவுள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கை அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சகல நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர்களும் இவ் விசேட முற்பணத்தினைப் பெறத் தகுதியுடையவர்கள். இம் முற்பணம் அமைய, தற்காலிக பணியாளர்களுக்கு கொடுப்பனவு செய்வதாயின் நிரந்தர அரச பணியாளர் ஒருவர் பிணையாளியாக பிணைமுறியொன்றைக் கையொப்பமிடுதல் வேண்டும்.

இவ் விசேட முற்பணத்தினை எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் கொடுத்து முடிக்கப்படுதல் வேண்டும் என அச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-167-100)

## பஸ் சேவை நீடிப்பு

தென்மராட்சி, ஜன. 12

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் மட்டுவில் வடக்கு, சரசாலை, மட்டுவில் தெற்கு, நுணாவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களின் நலன் கருதி சங்கானையிலிருந்து சாவகச்சேரி வரை நடத்தப்படும் 775 ஆம் மார்க்க பஸ் சேவை சங்கத்தானை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-117)

# தமிழர் தாயகம் குறித்து உணர்வுடன் செயற்பட்டவர் குமார் பொன்னம்பலம்

## பல்கலைக்கழக அனுதாபக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜன, 12

சுகபோக வாழ்க்கை நடத்துவதுகுறித்து பலர்சிந்தித்துக் கொண்டிருக்கும் போது தமிழர் பற்றியும் தமிழர் தாயகம் பற்றியும் உணர்வுடன் செயற்பட்ட மாமனிதர் குமார் பொன்னம்பலம்.

அமரர் குமார் பொன்னம்பலத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கைலாசபதி அரங்கில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அனைத்துப் பீட மாணவர்களும் கறுப்புப் பட்டி அணிந்து இந்த அனுதாபக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமிழினத்தின் உரிமைக்காக குரல் கொடுத்துக் கொண்டிருந்த தன்மானத் தமிழன் குமார் பொன்னம்பலம் கோழைத்தனமாக படுகொலைசெய்யப்பட்டுள்ளார்.

தமிழர்கள் மத்தியில் உள்ள புத்தி ஜீவிகள் தமது பட்டம் பதவிகளை இழந்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கும் போது குமார் பொன்னம்பலம் இவற்றுக்காக தமிழர்களுக்குஇழைக்கப்படும் அநீதிகளைக் கண்டு அதற்கெதிராக கிளர்ந்தெழுந்தார்.

கிருஷாந்தி கொலை வழக்கில் குமார் பொன்னம்பலம் குரல் கொடுக்காது விட்டிருந்தால் இன்று இதேபோன்ற பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் அதிகரித்திருப்பதுடன் புதைகுழிகளும் பல இடங்களில் உருவாகியிருக்கும்.

ஒடுக்கப்படும் தமிழர்களுக்காக குரல் கொடுத்துக் கொண்டிருந்த அவரின் கொலைக்கு எதிராக எம் மத்தியிலுள்ள பலர்குரல்கொடுக்க முன்வராதது வேதனைக்குரியது- இவ்வாறு கூட்டத்தில் பேசிய பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

குமார் பொன்னம்பலத்தின் கோரக் கொலைக்கு எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

எங்களுடைய காலத்தில் வாழ்ந்த அரசியல் வாதிகளில் குமார் பொன்னம்பலம் ஒரு முக்கியமான அரசியல் தலைவர் ஆவார்.

உண்மை, நேர்மை, துணிவு அவரிடம் மிகையாக காணப்பட்டது.

அரசியல் தலைவர்கள் சலுகைகளுக்காக அதிகார வர்க்கத்துக்குப் பின்னால் அலைந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் அவர் எவருக்கும் அஞ்சாது துணிவுடன் செயற்பட்டுவந்தார்.

பல அரசியல் தலைவர்களை நாம் இழந்து விட்ட போதும் குமார் பொன்னம்பலத்தின் இழப்பு பெரும் இழப்பாகி விட்டது.

எனவே குமார் காட்டிய பாதையில் உண்மை,நேர்மை துணிவுடன் நடக்க நாங்கள் திடசங்கற்பம் எடுப்போம் என மற்றொரு மாணவப் பிரதிநிதி கூறினார்.

மற்றும் மூன்று மாணவர்களும் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றினார்கள்.

வணபிதா எஸ். ஜெபசீலன் அடிகள், கலைஞானி ஆகியோர் சுடரேற்றி வைத்தனர். கவிதாஞ்சலியுடன் நிகழ்வு ஆரம்பமானது.

[இ-5-4]

## தையல் பயிற்சி ஆரம்ப வைபவம்

கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச கிராமிய அபிவிருத்திப் பிரிவினரால் கெற்பேலி பகுதி யுவதிகளுக்கான தையல் பயிற்சி வகுப்புகள் இன்று கெற்பேலி வீரபத்திரர் சனசமூக நிலைய மண்டபத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பிரதேச கிராமிய அபிவிருத்தி அலுவலர் இ. பரராசசேகரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு பயிற்சி வகுப்பினை ஆரம்பித்து வைப்பார். (ஐ-117)

# பயங்கரவாதத்துக்கு எதிரான ஐ.நா உடன்படிக்கையில் இலங்கை ஒப்பம்

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை விசாரணை செய்வது, பரஸ்பரம் நாடு கடத்துவது தொடர்பான ஐக்கியநாடுகள் சபையின் சர்வதேச உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக நிதி திரட்டுவதைத் தடை செய்யவும் -

குற்றம் இழைத்தவர்களை நாடு கடத்தவும் -

அத்தகையோரை விசாரணை செய்வதில் ஒத்துழைக்கவும் -

இந்தப் புதிய உடன்படிக்கை வகை செய்கிறது.

இந்த உடன்படிக்கையில் இலங்கையுடன் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், பின்லாந்து, மோல்டா, நெதர்லாந்து ஆகிய நாடுகளும் கைச்சாத்திட்டுள்ளன. மொத்தம் 22 நாடுகள் கைச்சாத்திட்ட பின்னர் 30 நாள்களில் உடன்படிக்கை அமுலுக்கு வருமென்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

# களுத்துறை தமிழ்க்கைதிகள் குமாரின் மறைவுக்கு அனுதாபம்

கொழும்பு,ஜன.12

அமரர் குமார் பொன்னம்பலத்துக்கு அனுதாபம் தெரிவித்து களுத்துறைச் சிறைச்சாலைத் தமிழ் கைதிகள் செய்தி ஒன்றை அவரது குடும்பத்தினருக்கு அனுப்பியுள்ளனர்.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குமார் பொன்னம்பலத்தின் படுகொலை தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பேரிழப்பாகும். அவரது மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும், வேதனையும் அடைந்துள்ளோம். நான்கு சுவர்களுக்கு நடுவே நாம் சந்திக்கும் வேதனைகளை, நெருக்கடிகளை, மனித உரிமைமீறல்களை அறிந்து நாம் முன்னெடுத்த போராட்டங்களுக்கு ஆதரவு வழங்கியதுடன் அவற்றை வெளியுலகத்துக்கும் தெரியப்படுத்தினார்.

பயங்கரவாதத்தடைச் சட்டம், அவசரக்காலச்சட்டம் ஆகியவற்றின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் விடுதலைக்காக தனது சக்திக்கு அப்பால் நின்று போராடினார்.

அவரது தூய்மையான இடத்தினை நிரப்பக்கூடிய ஒருவருக்காக ஏங்கி நிற்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## பாடசாலை மாணவர்களின்

# பஸ் சீஸன் ரிக்கெட் கட்டணம் 90 சதவீதத்தால் குறைப்பு

கொழும்பு,ஜன.12

அரசபாடசாலைகள்,அரச உதவி பெறும் பாடசாலைகளில் பயிலும் மாணவர்களின் பஸ் பயணப் பருவகாலச் சீட்டுக் கட்டணம் அடுத்த மாதம் முதல் 90 வீதத்தால் குறைக்கப்பட இருப்பதாக போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

மக்கள்மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து நிறுவனங்கள் வழங்கும் பருவகாலச் சீட்டுக்களுக்கே இக் கட்டணக் குறைப்பு அமுல் செய்யப்படும்.

மாணவர்கள் மொத்தக் கட்டணத்தில் 10 வீதத்தையே இனிச்செலுத்த வேண்டி இருக்கும் என்றும் -

தனியார் பாடசாலை மாணவர்களுக்கு தற்போது அமுலில் உள்ள கட்டணமே தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்றும் -

போக்குவரத்து அமைச்சர் எம்.எச். எம்.பௌஸி தெரிவித்துள்ளார்.(ஐ-7)

## இளைஞர் காயம்

பெரியபண்டிவிரிச்சான் பகுதியில் நேற்றுக்காலை குண்டு ஒன்று தவறுதலாக வெடித்ததில் இளைஞர் ஒருவர் இடதுகையில் காயமடைந்தார். ஞானப்பிரகாசம் கலின் (வயது 23 - பெரியபண்டிவிரிச்சான்) என்பவரே காயமடைந்த நிலையில் மல்லாவி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-7)

# ஆஸி 267 ஓட்டங்களால் வெற்றி

நடைபெற்றுவரும் 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்றையஆட்டத்தில் இலங்கை, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

இலங்கை அணி அயர்லாந்து அணியை 8 விக்கெட்டுக்களாலும் ஆஸ்திரேலிய அணி நமீபிய அணியை 267 ஓட்டங்களாலும் இங்கிலாந்து அணி அமெரிக்க அணியை 8 விக்கெட்டுக்களாலும் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஸிம்பாப்வே அணியை சிறப்பு ஓட்ட விகிதத்தாலும் வெற்றியீட்டின.

இன்று நியூஸிலாந்து அணி ஒல்லாந்து அணியையும் இந்திய அணி பங்களாதேஷ் அணியையும் தென்னாபிரிக்க அணி நேபாள அணியையும் பாகிஸ்தான் அணி கென்யா அணியையும் எதிர்த்து விளையாடும்.

## நேர்முகப் பரீட்சை

வவுனியா,ஜன.12

தேசிய கல்விக்கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான நேர்முகப்பரீட்சை திட்டமிட்டபடி இன்று காலை யாழ். கல்வி வலயத்தில் ஆரம்பமாகும் என வவுனியா கல்விக் கல்லூரிப் பீடாதிபதி க.அழகரத்தினம் தெரிவித்தார். (ஐ-7)

## நேற்று ஷெல்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை -

நகரை அண்டிய கரையோரப் பகுதிகளில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்த வண்ணம் இருந்தனர்.

சாவகச்சேரி நகரில்நேற்றுமாலை வரை பதற்றம் நீடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-31-117-133)

## சிறைத் தாக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைக்கைதிகள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஐ-3)

## கனத்தையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்து வைக்கப்பட்டுள்ள சாரதாம்பாளின் மற்றொரு சகோதரனும் இறுதிக்கிரியையில் பங்குபற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இறுதிக்கிரியைகளுக்கான ஏற்பாடுகளை ஈ.பி.டி.பி அமைப்பினர் செய்துள்ளனர். (ஐ-3-167)

## நோர்வே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு ஒன்றுக்கு சிகிச்சைக்குச் சென்றுள்ளதால் திட்டமிட்டபடி அவர் இலங்கை செல்லவில்லை என்றும்-

நோர்வே அரசுதெரிவித்துள்ளது.

தற்சமயம் இந்தியாவில் விஜயம் மேற்கொண்டுள்ள அவர் நாடு திரும்புவார் என்றும் -

இலங்கை செல்லும் திகதி விரைவில் முடிவு செய்யப்படும் என்றும் -

நோர்வே அரசு தெரிவித்துள்ளது.

சுகவீனம்காரணமாகவே நோர்வே அமைச்சரின் விஜயம் ஒத்திவைக்கப்பட்டதாக முன்னர் வெளியான தகவல்கள் தவறானவை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை -

நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சர் சமாதான முயற்சி தொடர்பாக இருதரப்பினருடனும் தொடர்ந்தும் தொடர்பு கொண்டுவருவதாக நோர்வே அரசு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-க-3)


**அநேக மாணவர்களினதும் பெற்றோர்களினதும் வேண்டுகோளுக்கிணங்க**

A/L 2001

பரீட்சைக்கான

பொது ஆங்கில வகுப்பு

ஆரம்பம் 13.01.2000

வியாழன் : மாலை 5மணி

வியாழன், செவ்வாய் : 5மணி – 6மணி

LECTURES BY:-

**MR.M.A. HARI**

* அனுமதிகள் வரையறுக்கப்பட்டிருப்பதால் முந்திக்கொள்ளுங்கள்.

DIRECTOR,

**HARY'S INSTITUTE,**

KONDAVIL EAST,

KONDAVIL. (72631)



**1st in Com, B Com Part I**

**2000,2001 - வெளிவாரி**

(யாழ். பல்கலைக்கழகம்)

எமது வழமையான விரிவுரையாளர்களுடன்

**பொருளியல்**

**S. வரதராஜன்**

இணைந்து விரிவுரையாற்றுவார்

புதிய அலகுகளுடன் ஆரம்பம் 16-01-2000

(G.A.Q 2001 விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன)

விவரங்களுக்கு S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம்சந்தி யாழ். (72607)



**SCIENCE COLLEGE**

வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம்.

**PAPER CLASS**

மீட்டல் வகுப்புக்கள்

A/L - 2000

சடமும், கதிரும்

செவ்வாய், வியாழன் 7.00 - 8.00 A.M

சனி, ஞாயிறு 10.00 - 11.00 A.M

A/L 2001

அலைவுகளும் அதிர்வுகளும்

சனி, ஞாயிறு 7.00 - 8.00

A/L 2002

சனி, ஞாயிறு 9.00-10.00

(72597) திரு. சம்பந்தன் B.Sc.



**அளவையியல்**

**S.Sமனோகரன்**

A/L 99 Day Class

ஆரம்பம்

வியாழன் - 4.30மணி

A/L 2002

திங்கள்,புதன் 3.00-4.00

A/L 2001,2000

PART - II

திங்கள்,புதன் 4.00-5.00

**ஸ்ரீகாந்த் கல்வி நிலையம்**

இணுவில். (72630)



**STP COMPUTER WORLD**

**விரிவுரைகள் ஆரம்பம்**

02.01.2000 இல் இருந்து 09.01.2000 வரை நடைபெற்று முடிந்த இலவச கருத்தரங்குத் தொடரின் நிமித்தம் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த விரிவுரைகள் யாவும் இன்றுமுதல் மீண்டும் ஆரம்பமாகின்றன.

**Exam - MS EXCEL & Windows**

16.01.2000 அன்று நடைபெறவிருந்த மேற்படி இரு பரீட்சைகளும் 23.01.2000(ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெறும்.

T.P. 2674

E-mail: Stpcom @ Sltnet.lk

STP Computer World,

54A, Palaly Road,

Kantharmadam,

Jaffna.

(C/10606)


# மரண அறிவித்தல்கள்

## ஐயம்பிள்ளை சின்னத்துரை

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை இல.79, சிவப்பிரகாசம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்கள் 08.01.2000 சனிக்கிழமை அன்று கொழும்பில் இறையடி எய்திவிட்டார்.

இவர் அமரர்கள் ஐயம்பிள்ளை - வள்ளியம்மை (நெடுந்தீவு) தம்பதிகளின் அன்பு மகனும் அமரர்கள் கணபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் மருமகனும் திருமதி கண்மணியின் அன்புக்கணவரும் மன்மதராசன் (கோண்டாவில்), சற்குணராசன் (பிரான்ஸ்), வேந்தராசன் (லண்டன்), கிருஷ்ணராசன் (பிரான்ஸ்), திருமதி கோமதி (கொழும்பு), துரைராசன் (கொழும்பு), நகுலராசன் (லண்டன்), செல்வி சசிகலா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி செல்வமலர் (கோண்டாவில்), திருமதி பத்மினி (லண்டன்), திருமதி ரட்ணாதேவி (பிரான்ஸ்), பிரேம்குமார் (வேலைத்திட்ட பொறியியலாளர், கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், அமரர் ஆறுமுகம், திருமதி சின்னம்மா (கல்மடு), திருமதி தெய்வானை (கனடா), சோமசுந்தரம் (கல்மடு) ஆகியோரின் அருமைச்சகோதரரும் இராசையா (இணுவில்), அமரர் கனகம்மா, அமரர் கோபாலபிள்ளை, திருமதி அன்னலட்சுமி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஏகாம்பரம் (கல்மடு), அமரர் பொன்னுத்துரை, இரட்ன சிங்கம் (மல்லாவி), அமரர் சிவபாதம், திருமதி லட்சுமி (கனடா), திருமதி சின்னம்மா (கல்மடு), திருமதி கனகேஸ்வரி (இணுவில்), திருமதி சிவபாக்கியம் (கனடா) ஆகியோரின் அன்புச்சகலனும் விமல்ராஜ், பிரகாஸ் (கோண்டாவில்), வேணுகா, தர்சிகா (லண்டன்), சிந்துஜா, சுமதியா (பிரான்ஸ்), யோகிதா, ஜெயகீதா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 10.01.2000 திங்கட்கிழமை காலை 9மணி முதல் அஞ்சலிக்காக பொரளை ஜயரட்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கிரியைகள் நாளை (13.01.2000) வியாழக்கிழமை பிற்பகல் 3மணியளவில் நடைபெற்று மாலை 5மணியளவில் பூதவுடல் பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

செ.பிரேம்குமார் (மருமகன்),
568B, 2/1, அளுத்மாவத்தை வீதி,
முகத்துவாரம்,
கொழும்பு - 15.
T.P. - 529358

## கந்தையா சிவப்பிரகாசம்

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவப்பிரகாசம் அவர்கள் நேற்று (11.01.2000) நண்பகல் இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், கந்தசாமி, கமலநாயகி, பத்மநாதன், புவனேந்திரன் (வவுனியா), உதயகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் சரஸ்வதியின் அன்பு மாமனாரும் நிஷாந், தன்.., சவிதா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2000) புதன்கிழமை 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூத வுடல் கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:-**

உதயகுமார் (மகன்),
கந்தசாமி (மகன்).

இலக்மி,
கோப்பாய் வடக்கு.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12-01-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.